1982

JL
0-,1MBR
N82
145561

# பாரதி மலர்



JL
JIMBR
N82
45661.

அரசினர் கலைக் கல்லூரி, திருத்தணி

# பாரதி மலர்

## அரசினர் கலைக் கல்லூரி,

கிருட்டினகிரி.

**1982**

---

### மலர்க் குழு

தலைவர் :

பேராசிரியர் ஆ. நாகராஜன், எம் ஏ., எம். எஸ்.,

கல்லூரி முதல்வர்.

ஆசிரியர் :

மா. கோதண்டராமன்.

# புரட்சிக் கவியின் புகழாரம்

பைந்த மிழ்த்தேர்ப் பாகன்; அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை;
குவிக்கும் கவிதைக் குயில்;இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு;
நீடுதுயில் நீக்கப்பாடி வந்த நிலா;
காடு கமழும் கற்பூரச் சொற்கோ;
கற்பனை ஊற்றும் கதையின் புதையல்;
திறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து;
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்;
அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்;

—பாரதிதாசன்.



சென்னை-600 008
14556

# மலரின் உள்ளே

1. காணிக்கை.
2. பாரதியின் பெருமை.
3. ஏன் இந்த அவசரமோ.
4. நூற்றுண்டுக்கவி பாரதி.
5. நீங்களும் சிந்தியுங்கள்.
6. உன்வாக்கு தேவ வாக்கு.
7. பாட்டுக்கு எங்கள் பாரதி.
8. அனல்மொழிக் கவிஞர்.
9. காற்றில் பறக்கின்றன.
10. பாரதிபாடிய கண்ணனும் பராசக்தியும்.
11. தாய்க்குலம் உய்விக்க வந்த பாரதி.
12. பாரதியார் மணிமொழிக் கோவை.
13. ஓடி நீ வாராயோ.
14. உறவு.
15. ஓரத்தில் நின்றுகொள்.
16. பாரதியின் காவடிச் சிந்து.
17. விளக்கு.
18. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
19. பாரதியாருக்குக் ‘கோடி’ ஆசை.
20. மூடபக்தி.
21. புதுமைக்கவிஞன் பாரதி.
22. கவிமேகம்.
23. வடவைக் கனல்.
24. புதுயுகப் புலவன் பாரதி.
25. இசையின் வழி நானறிந்த பாரதி.
26. பெண் விடுதலை.
27. கண்ணதாசனின் கவிதாஞ்சலி.





# காணிக்கை

பாரதி! எங்கள்
கவிதைச் சூரியனே
கவிதைக் குயில்களின்
நிரந்தரக் காதலனே
மணங்கமழ் மல்லிகையும்
மனமகிழ் மகிழம்பூவும்
எங்களுக்கு
எட்டாப்பூக்களே
அதனால்
சூரிய காந்திகளின்
சுடர்ப் பூக்களையே
உனக்குச் சூட்டவந்தோம்.
இது எங்கள் எண்ணமலர்.
உனக்காகவே பிறப்பெடுத்த
உறவுமலர்; எமதெளிய
காணிக்கை மலர்.

மனோரஞ்சிதங்களையே
மணந்துகொண்ட உனக்குச்
சூரியகாந்திகள் எம்மாத்திரம்
உன்னையே நினைந்துருகும்
உரிமைப் பூக்களின்
ஏக்கங்கள் முனகல்கள்
உன்னையே
வலம்வரத் துடிக்கின்றன
தள்ளிவிட மாட்டாய்
என்பதால் இம்மலரை
உன்பொற் பாதங்களுக்குச்
சூட்டவந்தோம்; ஏற்றிடுக.

காட்டில் பூத்துக்
காற்றில் கலந்திடும்
காட்டுப் பூக்களைவிட
நாங்கள் அதிர்ஷ்டசாலிகள்
எங்களுக்கு உன்பேரால்
அறிமுகம் கிடைத்துவிட்டது
மற்றும்
உன்னைப் போற்றிப்பாடிய
காகிதப் பூக்களே
மணம்பெற்று உலாவரும்போது
சூரியகாந்திகளின் இன்பஉலா
இனிக்காமலா போய்விடும்.

—ஆசிரியர்

# பாரதியின் பெருமை

டாக்டர். கா. மீனாட்சிசுந்தரம், M. A., M. Litt., Ph. D.,
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்.

பாரதியார், சிறப்பில்லாத வெறுமையைப் பாடும் வெற்றுப் பாடகர் அல்லர். அவரிடம் கவிதையின் உயிரையே காணகிறோம், அவர் எல்லாப் பொருள்களையும் ஊடுருவிப் பார்க்கும் வியக்கத்தக்க பார்வை பெற்றுள்ளார். சிறந்ததொரு தூண்டுதல் உணர்வால் புலவர்கள் பாடுகிறார்கள் என்பது உண்மை. மனித மனதில் தோன்றும் உந்துதல்களையும் உணர்ச்சிகளையும் இறவாத சொற்களில் சிறைப்படுத்துதற்குச் சிறந்ததொரு கருவி வேண்டும். அவர் கவிதைக்கலை நுட்பத்தில் போதிய தேர்ச்சி பெற்றிருந்தார். தனக்கு விருப்பமான புலவர்களுடன் அவர் கொண்டிருந்த அன்புத் தொடர்பால் அத்தேர்ச்சியினைப் பெற்றார். ஸ்பென்சரைக் கூறுவதைப்போலவே பாரதியாரையும் புலவர்க்குப் புலவர் என அழைக்கலாம். ஏனெனில் தற்காலக் கவிஞர் அவருடைய அடிச்சுவட்டையே பின்பற்றிச் செல்வதைக் காண்கிறோம்.

கவிதை என்பது மனிதனுள் மறைந்திருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதைத் தவிர வேறென்ன? பாரதியார் பல நேரங்களில் தெய்வீக உணர்வுகளைப் பெற்றுத் தம் உள்ளத்துணர்ச்சிகளைக் கொட்டுகிறார். அவர் எது சொன்னாலும் அதில் உண்மை பொதிந்திருக்கும். அவருடைய ஒவ்வொரு பாடலும் உண்மையின் முத்திரை பெற்றுத் திகழ்கிறது.

கலைப் படைப்பில் உறுப்புக்களுக்கிடையே இசைவு இருக்க வேண்டும். பகுதிகளில் ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்க வேண்டும். அவை முழுமை உணர்வைத் தரல் வேண்டும். தொடக்கத்திலேயே முடிவைப்பற்றிய குறிப்பிருத்தல் வேண்டும். எக்கலையும் முழுமை எய்தவேண்டின் வடிவும் பொருளும் முழுதும் ஒன்றுகின்ற இசைவு நிலையை அடைய வேண்டும். இதைத்தவிர புலவன் முக்கியமான குறிப்புகளைத் திறமையுடன் தெளிவு செய்வதில் முயலுதல் வேண்டும். பாரதி பாடல்களை ஆராய்ந்தால் நல்ல கவிதைக்கு என்னவெல்லாம் தேவையோ அவற்றையெல்லாம் அவை பெற்றிருக்கக் காணலாம்.

குயில் பாட்டு, பாரதியின் சிறந்த கலைத்திறனைக் காட்டுகிறது. தொடக்கத்தில் வேதப் பொருள் பாடும் வேகத்திரைகள் பற்றி விளக்கும் வரிகள், கதை முழுவதும் எதை நோக்கி அமைந்துள்ளதோ அந்தப் புகழ்வாய்ந்த முடிவை உணர்த்துகின்றன. அதில் உள்ள இயைபு, பாரதிக்குப் பாடல் அமைப்பில் இருந்த சிறந்த புலமையை வெளிப்படுத்துகிறது.

அவருடைய கவிதை குறுகிய வழியைப் பின்பற்றுவது அன்று. ஆனால் சமூகம் முழுவதையும் பற்றிக் கூறுகிறது. அவர் பாடாத பொருளே இல்லை. அவருடைய விரிந்த உள்ளமும் பல்துறைப் புலமையும் பெரும் புலவர் என்ற நிலைக்கு அவரை உயர்த்துகின்றன.

எல்லா நூல்களையும் நுணுகி ஆய்வதென்பது கடினமே, கவிஞன் தன் தன்மயத்துவத் தன்மையால் அதனைச் செய்து முடிக்க முடிகிறது. பாரதிக்கு அத்திறமை மிகுதியும் உண்டு. குயில் பாட்டில் மாட்டினையும் குரங்கினையும் வருணிக்கும் பொழுது அந்நேரத்திற்கு அவர் அம்மாடும் குரங்குமாகவே மாறிவிடுகிறார்

எல்லா மெய்ப்பாடுகளையும் வருணிக்கும்பொழுது அம்மெய்ப்பாடுகளாகவே மாறிவிடுகிறார். அவருடைய வருணிப்புகள் எல்லாம் அம்மெய்ப்பாடுகளுடன் இயைந்து தோன்றுகின்றன. வருணிப்பில் அவர் பயன்படுத்துகின்ற சொற்கள் அவருடைய வெறுப்பினையும், கடுமையையும், காதலையும், இரக்கத்தையும் விளக்குவனவாக உள்ளன. தன் அபூர்வக் கலைத்திறமையால் அவர் எதை வருணித்தாலும் அது போதிய அளவு வருணிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

நம் இலக்கியம் நீண்டகாலமாக வற்றாது பெருகி வரும் ஓடை என்பதை உணர்கின்ற உயர்ந்த உண்மையில்தான் அவருடைய பெருமை விளங்குகிறது. சிறந்த இலக்கியங்களில் தோய்ந்தாலன்றி நாம் எந்தச் சிறப்பினையும் அடைய முடியாது. பழைய இலக்கியத்தோடு புதிய இலக்கியம் கொள்ளும் தொடர்பு எந்தவகை இலக்கியத்திற்கும் இன்றியமையாத ஒன்று. 'மரபும் தனி ஒருவர் திறமையும்' என்ற கட்டுரையில் டி. எஸ். எலியெட் என்பார் மரபினைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை உணரச் செய்துள்ளார். அவர் அதனைக் குறுகிய பொருளில் பயன்படுத்தாமல் மிக விரிந்த பொருளில் பயன் படுத்துகிறார். மரபு என்பது முன்னதை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவதன்று அது தன் விருப்பத்திற்குரிய புலவர்களின் பாதையிலேயே போவதும் அன்று அதன் பொருள், குறிப்பிட்ட புதிய இலக்கியம் தோன்றும் முன்னே இருந்த எல்லா இலக்கியங்களையும் குறிக்கும். கடலனைய மரபுகளில் தோன்றிவரும் மலையனைய அலையே புதிய இலக்கியம். பழமை, புதுமையில் பொதிந்துள்ளன. புதுமை, இனிமேல் தோன்ற இருப்பதை உருவகிக்கிறது இதைத் தவிர பழமை தற்கால நிலைக்கேற்ப திருத்தப்படுகிறது. புதுமை பழமையிலிருந்து வலுவைப் பெறுகிறது. ஏனெனில் புதுமையின் வேர் பழமையில் உள்ளது. பாரதியின் 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி' மரபிற்கும் தனி ஒருவரின் திறமைக்கும் உள்ள உறவிற்கு எடுத்துக்காட்டாகலாம்.

காமத்துப் பாலில் வள்ளுவர் காதல் போதையைப் பெருமைப்பட வருணிக்கிறார். அவர் காதலை நினைக்கும் பொழுதெல்லாம் கள் அவர் நினைவுக்கு வருகிறது. அவர் கருத்துப்படி காதல், கள்ளைவிட போதை தரக்கூடியது. உள்ளக்களித்தலும் காண மகிழ்த்தலும் கள்ளுக்கு இல்லை; ஆனால் காமத்திற்கு உண்டு திருக்குறளில் நன்கு ஊறித்திளைத்தவர் பாரதியார். அதனால் வள்ளுவரின் காதல், கள் பற்றிய விளக்கத்தில் பெரிதும் கவரப்பட்டுள்ளார். அவர் கள்ளுக்கும் காதலுக்கும் இடையே ஒப்பிடுவதில் எப்பொழுதும் சோர்வதில்லை.

சம்பந்தரின் பாடலினிமை, நம்மாழ்வாரின் சமய அனுபவம். ஆண்டாளின் தெய்வீக இன்ப நிலை ஆகியவை அவற்றைத் தன் பாடல்களில் புகுத்தியுள்ள பாரதியின் கற்பனையைக் கவர்ந்துள்ளன.

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்ற அப்பரது அஞ்சாமையையும் மாணிக்கவாசகரின் அஞ்சாமையையும் நிலைபேறற்ற உலகப் பொருள்களைப் பொருட்-



படுத்தாத அவர் தம் இறை பக்தியையும் பாரதியார் பாடல்களில் காண்கிறோம். நம் இலக்கியத்தில் தனிநாகரிக மனிதனைக் காண்கிறோம். அவர், நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பவர். நாகரிக மனிதனைப் பற்றிய இக்கருத்து நற்றிணையில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

முந்தை யிலிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்.

—நற்றிணை 355

வள்ளுவர் கூட இதே புனிதக் கருத்தைப் பேசுகிறார்.

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரீகம் வேண்டு பவர்.

—குறள், கண்ணோட்டம்,

பாரதியார் இத்தகைய பண்பாளனைப் பற்றிய கருத்தை வள்ளுவரிடமிருந்து பெற்றுள்ளார் போலும்!

பாரதி கையில் பழங்கருத்துக்களும் பழைய இலக்கிய அமைப்புக்களும் (Forms) புத்துயிர் பெறுவதைப் பார்க்கிறோம். கம்பன் காலத்திற்குப் பிறகு நம் பெரும்பான்மை இலக்கியம் உயரிய பாங்கைப் பாடுவனவாக இல்லை. அவற்றில் புதுமை இல்லை. அத்தகைய கவிதை மக்கள் மனதைத் தொட முடியாது. தாயுமானவர் பாடல்களிலும், இராமலிங்க சுவாமிகள் பாடல்களிலும் இந்நிலை பெரிதும் மாறியுள்ளதைக் காணலாம். பாரதி அதே முறைகளைப் பின்பற்றி மக்களின் மனதைக் கவர்வதற்காகப் பாடுகிறார். அவர்கள் பெருததை அவர் பெற்றிருக்கிறார். அவருடைய ஆங்கிலமொழி இலக்கியப் புலமை, புதிய எண்ணக் களஞ்சியத்தையும் சொற்களஞ்சியத்தையும் திறந்துகாட்டின. ஆங்கில மொழிப் புலவர்கள் எந்த அளவு அவர்மீது ஆளுமை புரிந்தனர் என்பதை முன்பே பார்த்தோம். தமிழில் சானட்பாட அவர் செய்த முயற்சி அவர் ஆங்கில இலக்கிய வடிவங்களைக் கற்றதன் விளைவே. வால்ட் விட்மனின் வசன கவிதை அவரைத் தமிழிலும் அதைப்பாடி பார்க்கத் தூண்டியது. அவருடைய 'நெஞ்சைத் தின்னும்' என்னும் சொற்றொடர் மில்டனுடைய Eating cares என்பதன் எதிரொலியே. பழமொழிகளைப் பயன் படுத்தியதும், நேரான இனிய உவமைகளைப் பயன்படுத்தியும் அவருடைய சொல்லாககமும் வாழ்க்கையில் நாளும் மக்கள் வழங்கும் சொற்களையும், மரபுச்சொற்களையும், சொற்றொடர்களையும் பயன்படுத்திய முறையும், அவருடைய கவிதைக்குப் புதுமையையும் தனிச்சிறப்பையும் தந்து மக்கள் மனதில் அவை என்றும் நிற்கும் வண்ணம் செய்துள்ளன.

வேர்ட்ஸ்வொர்த் கவிதை நடைக்கும் உரைநடைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினைக் குறிப்பிட விரும்பவில்லை. வேர்ட்ஸ்வொர்த் கவிதை பற்றிக் கூறிய இலக்கணத்திற்கு உரிய விளக்கங்களே பாரதியார் பாடல்கள் என்று உறுதியாகக் கூறலாம். உணர்ச்சி கொப்புளிக்கின்ற சூழ்நிலையை வருணிக்கும் பொழுது மனிதர்கள் பேசுகின்ற சாதாரண மொழியையே பயன்படுத்த வேண்டும் என்பது வேர்ட்ஸ்வொர்த்தின் கருத்து. பழமையிலும் புதுமையிலும் பொருத்தமானதையும் புகழுக்குரியதையுமே பாரதியிடம் காண்கிறோம் என்பது உயர்வு நவிற்சியன்று. அவரிடம் கீழை நாட்டுக் கருத்துக்களும் மேலைநாட்டுக் கருத்துக்களும் சந்தித்து ஒன்றுவதைக் காண்கிறோம்.

இந்நாட்டிற்கே பொருத்தமான புகழ்வாய்ந்த பண்களையும் நடோடிப் பாடல்களில் வரும் சந்தங்களையும் அவர் பயன்படுத்துகிறார். இசைவாணர்களால் பாடப்படுதற்கு ஏற்ப எளிதாக அமையும் இயல்புடன் ஏறக்குறைய எல்லாப் பாடல்களும் இனிய இசைப் பண்புகள் கொண்டனவாக உள்ளன. அப்பாடல்களில் தம் இசைத்திறனை வெளிப்படுத்துதற்கு வாய்ப்பு மிகுந்திருப்பதை இசைவாணர்கள் உணர்கின்றனர். அதன் பயனாக மக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்து அவர் பாடல்கள் புகழடைகின்றன.

பாரதியார் மிக அரிய உயர்ந்த அகத்தூண்டுதலுணர்வைப் பெற்று கவிதையின் உச்ச நிலையையே தொடும் வன்மை பெற்றுள்ளார். 'ஊழிக்கூத்தில் அவர் புதிய வகைச் சந்தத்தையே உருவாக்கியுள்ளார். அதில், உலகங்கள் ஒன்றோடொன்று மோதி உருளும் 'கட், 'கட்' ஒலியைக் கேட்கலாம். பாடலில் கேட்கும் ஒலியே பாடலின் பொருளை எதிரொலிப்பதற்குச் சான்றாக இப்பாடலைக் காட்டலாம். இப்பாடலில் பெருமையும் பீடுநடையும் இருக்கக் காண்கிறோம். கதிரவன் உதயக் காட்சியில் இறைவன் ஆடும் கூத்தினைக் கம்பன் கண்டான். அவனுடைய சொல்லோட்டத்திலேயே சிவன் கூத்தின் பேரொலியைக் கேட்கிறோம். எனினும் அவர் இயற்கையின் கொடுமையைப் பாடவில்லை. ஆனால் பாரதி அழகினையும் அழிவினையும் பாடியுள்ளார்

இயற்கையில் நாம் கொடுமையையும் அழகினையும் காண்கிறோம். ஸ்டீவென்சன். தன்னுடைய பானின் குழல்கள் என்பதில் கவர்ச்சியுள்ள முறையில் இக்கருத்தை விளக்கியுள்ளார். பானிடம் ஒவ்வாத இயல்புகள் இருப்பதாக அவர் வருணிக்கிறார். "படையெல்லாம் சிதறி ஓடும் வண்ணம் நிலத்தைப் பயங்கரமாக உதைத்ததாக இயற்கைக் கடவுளான பானை கிரேக்கர்கள் வருணித்துள்ளனர். காட்டுப்பக்கம் வேனிற்காலப் பகல் நேரத்தில் மேட்டுப் பகுதியில் உழுதுகொண்டிருக்கும் உழவன் மனம் மகிழ அவர் தன் குழலில் மிக இயல்பாக எளிமையாகப் பாடிச்சென்றார் என்றும் வருணித்துள்ளார்." கிரேக்கர்கள் அவ்வாறு வருணித்ததன் மூலம் மனித அனுபவத்தின் எல்லையைக் கூறியுள்ளனர்.

கொடுமையும் அழகும் பற்றிய இக்கருத்து புதிது அன்று. நம் இலக்கியம் இக் கருத்தினையும் அனுபவத்தையும் மிகுதியும் கூறியுள்ளது. பிருந்தாவனத்தில் குழலூதும் கண்ணன் குருஷேத்திரப் போர்க்களத்தில் வேறு பாத்திரமாகச் செயல் படுகிறான். முருகக் கடவுளிடத்தும் அழகினையும் கொடுமையையும் காண்கிறோம். பாரதியாரை இக்கருத்துக் கவர்ந்ததில் வியப்பொன்றும் இல்லை.

காளியின் உருத்திர தாண்டவம் உலகங்கள் மோதிக் கொள்வதில் முடிகிறது மோதும் இயல்பு வாய்ந்த பொருளனைத்தும் ஊழிக்கால வெள்ளமாக வெளிப்பட்டு அது போகின்ற போக்கிலே உள்ள அனைத்தையும் அடித்துக்கொண்டு போகிறது.

ஒவ்வொரு பொருளையும் இயக்கும் காலமும் முடிவினை எய்துகிறது. இறைவன் கைபட்டதும் வன்பொருளும் மென்பொருளும் ஒன்றாக உருகுகின்றன. புரட்சிக் கூறுகளின் சக்தி, நம் உணர்வைக் கடந்த தெய்வீக இசைவிற்கு வழிவிடுகிறது.

"ஆசைமுகம் மறந்துபோச்சே" என்னும் பாட்டில் இதுவரையிலும் எப்பாடலிலும் சொல்லாத சிறந்ததொரு அனுபவத்தைக் காண்கிறோம். அவர், காதலியின் உள்ளத்தில் காதலன் உருவம் முழுவதும் மறைந்துவிட்ட தன்மையைப் பாடுகிறார்.



அவனுடைய உருவத்தை நினைவுகூரும் பொழுது காதலிக்கு ஓரளவு மன அமைதி ஏற்படலாம், ஆனால் இங்கே அதுவும் மறுக்கப்படுகிறது.'

செல்லி பாடுகிறார் :

"பாடிய குரல் மறைந்த பின்னரும் இசை நினைவில் ரீங்காரம் செய்கிறது. வயலெட் மலர்கள் வாடிய பின்னரும் அவற்றின் நறுமணத்தை நினைவில் உணர்கின்றேன். காதலியின் படுக்கையில் பரப்பப்படும் ரோசா மலர்கள் வாடிய பின்னரும் அவற்றின் நறுமணம் என் நுகர் புலனில் நிலைபெற்றிருக்கிறது. அதேபோன்று நீ மறந்துவிட்டாலும் உன் நினைவு என்னுள் இனிக்கிறது. காதல் தூங்குகிறது".

இப்பாட்டில் ஒருவருடைய நினைவு மனதில் நிலைக்கிறது. ஆனால் பாரதி பாடலில் அந்த நினைவும் மறைகிறது. நம் கண்முன்னே காதலன் முகம் மறந்துபோன காதலியின் சொல்லொணாத்துன்பமும் நம்பிக்கையின்மையும் விரிந்து தோன்றுகின்றன. பாரதிக்கு நிலைபேற்று மாலையைச் சூட்டுவதற்கு இப்பாடல் ஒன்றே போதுமானது.

பாரதியார் பாடல்களில் தொடர்ந்து கருத்து வளர்ச்சியையும் சொற்றொடர் வளர்ச்சியையும் காண்கிறோம். அவருடைய தொடக்க காலப் பாடல்களில் வெறும் சொற்கவர்ச்சியைக் காண்கிறோம். அவரைப்போல் உணர்கின்ற ஒவ்வொரு புலவனுடைய பொது அனுபவமும் அதுவே. அவருடைய பிற்காலப் பாடல்களில் உள்ள ஆழமும் முதிர்ச்சியும் ஆரம்பகாலப் பாடல்களில் இல்லை. இருப்பினும் அவை கவர்ச்சி கொண்டனவாக உள்ளன.

பாரதியார் உண்மையையும் அழகையும் தேடி ஒரு பெரும் பயணமே மேற்கொண்டுள்ளார். அத்தகைய பயண முயற்சியை அவருடைய ஆரம்பகாலப் பாடல்களில் ஓரளவு காண்கிறோம். அவருடைய பாடல்களில் மணிமுடியாகக் கருதக்கூடிய குயில் பாட்டில் அவருடைய பயணத்தின் முடிவைப் பார்க்கிறோம். கதை பொதி பாட்டின் கவர்ச்சியிலும் அழகிலும், கவிதையுலகில் செல்லி, கீட்ஸ் ஆகியோரோடு வைத்து எண்ணப்படும் சிறப்புடன் பாரதி திகழ்கிறார்.

---

## ஏன் இந்த அவசரமோ?

இராசா. பிரேம் குமார்,
இளங்கலை இரண்டாம் ஆண்டு (வரலாறு)

பாரதி,

தமிழன்னைக்கு
புரட்சிப்பா ஆடையிட்டு
சுதந்திர மங்கையிடம்
தூதுவிட்ட நீ
அவள் வரும் வரை
பொறுத்திராமல்
சொர்க்கக் கன்னியுடன்
சரசமாடச் சென்றுவிட்டாயே,!
ஏனிந்த அவசரமோ!

6

# ‘ நூற்றாண்டுக் கவி பாரதி ’

த. கோவிந்தராஜ்,
தமிழ் இலக்கிய மன்றச் செயலர்,
இளங்கலை இடையாண்டு, (தமிழ் இலக்கியம்)

நூற்றாண்டு புலவனுக்குப் பாரதிமலர் தொடுத்தோம்
எட்டையபுரத்திலே மணிமண்டபம் எழுப்பிவைத்தோம்
சேற்றிலே முளைத்ததோர் செந்தாமரையாய்
எட்டையபுரம் ஈன்றெடுத்த பாரதி வாராய்!

ஆற்றல்மிகு தமிழ்கவிக்கு அடிமையானாலும்
பட்டினிக் கொடுமைக்கு முதல்குரல் தந்தாய்
காற்றிலே பறக்கவிட்டாய் அடிமைவிலங்கை
பூட்டிவைத்த பெண்டிர்க்கு முதலிடம் தந்தாய்!

கற்புநிலை இருபாலர்க்கும் சொந்தம் என்றாய்
சட்டங்கள் பெண்களுக்கு இயற்றச் சொன்னாய்
பெற்றதந்தை இல்லாமல் போய்விட்டாலும்
பட்டம்பெற உன்வழியில் சென்றால் போதும்!

ஏற்றமிகு நல்லுரைகள் எமக்குத் தந்தாய்
நாட்டுப்பற்றை முரசுகொட்டி நயமாய்த்தந்தாய்
விற்ற நாட்டை திரும்பப்பெற உணர்வைத்தந்தாய்
பட்டொளி வீசிப்பறக்கும் மூவண்ணக்கொடி பாராய்!

கற்றறிவை எமக்கெல்லாம் பகர்ந்து தந்தாய்
எட்டாதூரம் நீசென்றால் மறந்திடுவோமா?
போற்றி போற்றி! ஓர்ஆயிரம் போற்றி! நின்
தமிழ்த் தொண்டிற்குக் காணிக்கையாக்குகிறேன்.

7

# நீங்களும் சிந்தியுங்கள்

மு. வை. அரவிந்தன்

## 1

தென்னங்கீற்றை, தென்னைமரக்கிளை என்று எழுதுவது மரபுப்பிழை, ஆனால். பாரதியார் தம் கவிதைகளில் — பல இடங்களில், ‘தென்னை மரக்கிளை’ என்றே கூறியுள்ளார். அவை பின்வருமாறு;

தென்னை மரக்கிளை மீதில் — அங்கோர்
செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்!
— பல் வகைப்பாடல்கள் - அந்திப்பொழுது-2.

தென்னை மரத்தின் கிளையிடையே
தென்றல் போய். . . .
— பல் வகைப்பாடல்கள் - காலைப்பொழுது-3.

தென்னை மரக்கிளை மேல் சிந்தனை யோடு
ஓர் காகம்
— பல் வகைப்பாடல்கள் - காலைப்பொழுது-4.

★ ★ ★

குயில் கூவுகிறது என்பது மரபு. ஆனால் பாரதியார், ‘காணி நிலம் வேண்டும்’ என்று தொடங்கும் கவிதையில்,

கத்தும் குயிலோசை - சற்றே வந்து
காதில் பட வேணும்!

என்று பாடி, குயில் கத்துவதாய்க் கூறி மரபை மாற்றுகிறார்.

## 2

‘தாயின் மணிக்கொடி பாரீர்’ என்று தொடங்கும் கவிதையில்,

‘ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்’

என்று கம்பத்தை வருணிக்கின்றார். நடப்பட்ட கம்பத்திற்கு உயிர் இல்லை. அதனால் அது ஓங்கி வளராது. ஆனால் பாரதியார் பாடுகின்றார், ‘ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்’ என்று!

பாரத தேசம் என்ற கவிதையில்,

வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம் - அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்!

என்று கூறுகின்றார் கவிஞர். இதில் 'அடி' என்ற சொல், பொருளற்று, எந்தத் தொடரோடும் ஒட்டாமல் தனித்து நிற்கிறது. 'அடி' என்ற சொல்லை எதனோடு சேர்ப்பது? எப்படிப்பொருள் கொள்வது?

ஞிமிறு என்ற சொல், தேனீயைக் குறிக்கும். அச்சொல்லை 'ஞிமிர்' என்று திரித்து, புதிய ஆத்திசூடியில்,

'ஞிமி ரென இன்புறு'

என்று வழங்கியுள்ளார்.

## 3

சந்தி எழுத்துகள் மிகுவது பற்றிய இலக்கண விதியைப் பாரதியார் கைவிடும் இடங்கள் சில உள்ளன.

சின்னக் குழந்தை — சின்னத்தை (அடையாளத்தை) உடைய குழந்தை என்றும்,
சின்ன குழந்தை — சிறிய குழந்தை என்றும் பொருள் படும்:
இதற்கு மாறாக, பாரதியார் சிறிய குழந்தை என்ற பொருளில், 'சின்னக் குழந்தை' என்று எழுதுகின்றார்.

அந்த இந்த ஆகிய சுட்டுக்கு முன்னால் வல்லின எழுத்து மிக வேண்டும். பாரதியார் இந்த விதியைப் பின் பற்றுவதில்லை. இதனைப் பாரதிதாசனும் குறிப்பிட்டுள்ளார்†.

யாப்பிலக்கண விதியையும் பாரதியார் சில இடங்களில் புறக்கணித்துள்ளார். வெண்பாவில் காய்ச்சீர் முன் நிரையசையில் தொடங்கும் சீர்வராது. காய்முன் நேரசை வருதல் வேண்டும். ஆனால் பாரதியார் பாரத தேவியின் 'திருத்தசாங்கம்' என்ற பாமாலையில் உள்ள, கருணை உருவானாள்' என்று தொடங்கும் வெண்பாவின் இரண்டாம் அடியும் தனிச்சொல்லும் பின் வருமாறு உள்ளன :

" செருநரை வீழ்த்துபடை என் செப்பாய் — பொருபவர்மேல்"

இதில்,
என் செப்பாய் என்பது தேமாங்காய். காய்முன் நேர் வராமல், 'பொருபவர் மேல்' என்று 'நிரையசைச் சீர்' வருகிறது. இது யாப்பிலக்கண விதிக்கு முரணானது.

குயில் பாட்டிலும் இத்தகைய முரண் உள்ளது :

"பெண்மைக் கிரங்கி, பிழைபொறுத்தல் கேட்கின்றேன்!
அறிவும் வடிவும் குறுகி அவனியிலே
சிறிய தொரு புள்ளாய். . . ."

இதில், கேட்கின்றேன்— தேமாங்காய். காய்ச்சீர் முன், 'அறிவும்' என்று நிரையசை வந்து தளை தட்டுகிறது. இவ்வாறே அவனியிலே என்பது கருவிளங்காய்; காய்ச்சீர் முன் 'சிறிய' என்ற நிரையசை வந்து விடுகிறது!

குயில் பாட்டை வெண்பா யாப்பில் (வெண்கலிப் பாவாக) பாடிவந்த கவிஞர் அதனை முச்சீர் அடியாக முடிக்காமல்,

† பாவேந்தர் நினைவுகள்— பக் 88. முருக சுந்தரம்



'யாதானும் சற்றே இடம் இருந்தால் கூறீரோ!'
என்று நாற்சீர் அடியாக முடிக்கின்றார்!

## 5

கண்ணனை விளையாட்டுப் பிள்ளையாகக் கண்டு பாடிய பாடலில்,

புள்ளாங்குழல் கொண்டு வருவான்-அமுது
பொங்கித் ததும்பும் நற் கீதம் படிப்பான்

என்று பாடியுள்ளார். 'கீதம் இசைப்பான்' என்பதை படிப்பான் என்று பாடி மரபை மாற்றுகின்றார்!

## 6

'கண்ணன்— என் காதலன்' என்ற பாடலில், காதலி தன் பாங்கியிடம், கண்ணன் என்னைத் திருமணம் செய்து கொள்ளாவிட்டால்,

"அன்னிய மன்னர் மக்கள் பூமியில் உண்டாம்-என்றும்
அதனையும் சொல்லிட்டி தங்கமே தங்கம்!"

என்று கூறுகின்றாள், "கண்ணன் என்னைத் திருமணம் செய்து கொள்ளாவிட்டால் வேறு மன்னர்களை நான் மணக்கவும் தயார்!" என்று காதலி கூறுவது நாகரிகமாக இல்லை!

# உன் வாக்கு தேவ வாக்கு!

சு. புவனேஸ்வரி,
இளங்கலை இரண்டாம் ஆண்டு.

எரிமலைப்பூவே !

" தனியொரு மனிதனுக்கு
உணவிலை யெனில் - ஜகத்தினை
அழித்திடுவோம் ! " என்றாய்

இன்னும் உன்- வாக்கைப்
பரிபாலித்து வருகிறோம்
வேதவாக்காக......

இன்று யாரும்
தனி ஒரு மனிதனாக
இறப்பதில்லை !

பஞ்சக் காலத்தில்
பசியால் மக்கள்
கூட்டங் கூட்டமாக
இறந்து - உன் வாக்கைக்
காப்பாற்றுகிறார்கள் !

# பாட்டுக்கு எங்கள் பாரதி.

ஜி. இ ர வி,
கணிதவியல் முதலாண்டு.

பாரதி என்பவன் புலவனடா ! அவனைப்
பார்க்கவே பாடல் பிறக்குமடா !

தேடினும் கிடைக்கா செல்வமடா ! தமிழ்த்
தேனினும் இனிய புதையலடா !

அமுதினும் இனிய தமிழடா ! எங்கள்
அன்னைத் தமிழ் என்றே சொல்லுங்கடா !

வீரத்தைக் கொண்டவன் பாரதியடா ! இன்றவன்
விவேகத்திற்கு ஈடு இல்லையடா !

பாசம் நிறைந்தவன் பாரதியடா! தமிழ்ப்
பற்றும் நிறைந்தவன் பாரதியடா !

சுதந்திர தாகம் கொண்டானடா ! எங்கும்
சுற்றித் திரிந்த பறவையடா !

மீண்டொரு பிறவி தேவையடா ! இன்றவன்
மீசைக்கு ஈடு இல்லையடா !

நல்ல எண்ணம் கொண்டானடா ! அவன்
நாட்டுக்குச் சேவை செய்தானடா !

போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோமடா ! அவனைப்
போற்றி புகழ்ந்து பாடுவோமடா !





# அனல் மொழிக் கவிஞர்

பா. முனியப்பன்,
பி. ஏ., இரண்டாமாண்டு, வரலாறு.

பெண்ணின் பெருமை பேசவந்த
பேராளனே வாழ்க !...
இனிக்கும் உன் தேனமுதமொழிக்கு
எந்த மொழி ஈடாகும் !

வெள்ளையரை விரட்ட போர்முரசம்
கொட்டியவனே வாழ்க நீ!
நீ சொல்லிய சொல் ஒவ்வொன்றும்!
ஆயிரம் படைக்கணையாகும்!

நிலாவில் கால் வைக்கும் முன்னே
கனாக் கண்டவனே வாழ்க!
சின்னஞ்சில் மறைந்த விடுதலைக் குயிலே
விரைவில் நீ வர வேண்டும்!

முன்னி நினைத்த தெல்லாம் சீர் கெட்டு
போகுதையா இப்போது இங்கே.
சீரழியும் முன்னே நீ சீக்கிரம்
தோன்ற வேண்டும் கண் முன்னே;



# காற்றில் பறக்கின்றன

தொ. ந. சாந்தி,
விலங்கியல் பிரிவு,
(ஆ. வ.)
மூன்றும் ஆண்டு

ஆடுவோமே பள்ளு பாடுவோமே என்று பாடினாய்
நீ அன்று !

இன்று ஆடுகிறார்கள்; பாடுகிறார்கள் !
நாங்கள் கேட்டது வீர சுதந்திரத்தை — ஆனால்
பெற்றதோ கொத்தடிமைத் தனத்தை !

புதுமைப் பெண்களைப் படைத்தாய் நீ — அவர்கள்
பதுமையாய் மாறியதன் விந்தை என்னவோ !
மாட்டை மட்டும் சந்தையில் விற்பதில்லை —
இன்று........
நாங்களும் மாடு தான்
கல்யாணச் சந்தையில் விலை பேசப்படும்
விலைபோகாத மாடுகள், !

சமுதாயத்தில் மகளிர் பங்கு என்று — நீ
எழுதியவை எத்தனை எத்தனையோ !
மலிவுப் பதிப்பில் மகளிர் கவர்ச்சிப் படமாய்க்
காட்சியளிப்பதன்; பாங்கையா நீ சொன்னாய் ?

"ஜாதிகள் இல்லையடி பாப்பா"
சொன்னது பாப்பாவுக்குத் தானே
எனக்கில்லையே........
உனக்குப் பட்டிமன்றங்கள் ! நூற்றாண்டு விழாக்கள் !
சுவரொட்டிகள் ! நினைவுச் சின்னங்கள் !
பரபிரம்மமாய் எங்கும் நீ உயர்ந்து விட்டாய் !
உன் கருத்துக்களோ — கவனிப்பாரின்றிக்
காற்றில் பறக்கின்றன.





# பாரதி பாடிய கண்ணனும், பராசக்தியும்

ந. ரவிசங்கர்,
இளம் அறிவியல் இடையாண்டு (கணிதம்)

பாரதத்தின் வரலாற்றிலே, 20ம் நூற்றாண்டு ஒரு தனிப் பெருமையைப் பெற்றிருக்கிறது. 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி' இருந்த இந்நாடு கொண்டிருந்த மாபெரும் உறக்கத்தை அகற்றினார்கள் சில நவயுக நாயகர்கள். பல்லாண்டுகளாய் அடிமை வாழ்வு நடத்திய இந்தியர்களின் உணர்ச்சிக் குவியல்களைக் கவிதை மழையாய்ப் பொழிந்த கவிஞர்களில் தலை சிறந்தவர் பாரதி.

ஒரு சமுதாயத்தில் மாற்றங்களை உண்டாக்கும் வலிமை எழுத்துக்களுக்கேயுரியது. 'எமக்குத் தொழில் கவிதை' என முழங்கி வரும் பாரதியாரே தமிழகத்தின் எல்லாத் துறை புரட்சிகளையும் தன் எழுத்தின் மூலம் பிறப்பிக்கிறார். வள்ளலார் இராமலிங்க அடிகளாரின் அடியொற்றி பாரதியாரும் கவிதை வழியில் சமயப் புரட்சியை வளர்த்தார்.

'சமயம் என்பது மனிதனை நல்வழிப்படுத்துவது. அவனது மனதிற்கு ஒரு உயரிய மகிழ்ச்சியை ஏற்படுத்துவது' என்கிறார் டாக்டர். இராதாகிருட்டிணன். இத்தகைய சமயத்திலே, ஆயிரமாயிரம் கிளைக் கொள்கைகள் வேர் விட்டு வளர்ந்துள்ளன ஆயிரமாயிரம் போலிச் சாதிகளும், சடங்குகளும் நிலை பெற்றுள்ளன. 'ஆயிரம் தெய்வங்களுண்டு எனத் தேடி அலையும் அறிவிலிகாள்' என்று மூட மாந்தரைச் சாடும் பாரதியார்,

'ஆயிரம் வேதமறி வொன்றே தெய்வ முண்
டாமெனல் கேளீரோ'

என்கின்றார் பாரதியார். ஒன்றே தெய்வம் என்ற கருத்தை உறுதியாகப்பாடும் பாரதியார் பல மதக் கருத்துகளையும் வெறுக்காது, சர்வ மத சமரசத்தைப் பற்றிப் பல பாடல்களைப் பாடுகின்றார்.

'யாமறிந்த மதங்கள் பலவுளா மன்றே;
யாவினுக்கு முட் புதைந்த கருத்திங்கொன்றே'

என்பதன் மூலம் சர்வ மத சமரசக் கொள்கையை நிலை நாட்டும் பாரதி இயேசு கிறித்துவைப் பற்றிப் பாடும் போது 'தேவர் வந்து நமக்குட் புகுந்தே நாசமின்றி நமை நித்தங் காப்பார்' என்கின்றார். மாயை நீங்கினால் மாதவனை அடைய முடியும் என்று உறுதி கூறுகின்ற பாரதி அல்லாவைப் புகழ்ந்தும் பாடுகிறார். 'சொல்லாலும் மனத்தாலும் தொடரொணாத பெருஞ்ஜோதி' அல்லா என்கின்றார் பாரதியார். மேற்கூறிய இரு கருத்துகளை விளக்கும் பாரதி கிறித்துவ, இஸ்லாமிய மத ஒற்றுமையை நிறுவுகிறார். கவிஞன் மனம் நல்லவை எங்கிருந்தாலும் அவற்றை நாடும் என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாக நின்றவர் பாரதியார்.

பிற மதங்களை வெறுக்காமல், தம் மதக்கொள்கைகளைப் பரப்பிய பெருமை இந்தியத்தத்துவ வித்தகர்களைச் சாரும். ஒருவனைப் போல மற்றவன் மனம் அமையாது; மனங்களின் இயல்புகளுக்கேற்ப பலவிதக் கொள்கைகளைக் கொண்ட, ஜனநாயக அமைப்பிலுள்ள ஒரே சமயம் இந்து சமயமாகும்.

இறைவனைப் பற்றிய பலவிதக் கருத்துக்களை, நெறிகளை - பாடல்களிலே போற்று-கின்ற கவிஞன் விரும்புவது கண்ணனையும், பராசக்தியையும் என்பதில் ஐயமில்லை. ஆணும் பெண்ணும் சமம் என்பதைச் சமுதாய சீர்திருத்தப்பாடல்களில் பாடும் பாரதி சமயப்பாடல்களிலும் அதை நிலை நாட்டுகிறார். அவரது சமயப்பாடல்களில் கண்ணனும், பராசக்தியும் சம உரிமை பெறுகிறார்கள்.

கண்ணனை பலவித உறவுமுறைகளில் நேசிப்பது அடியவர்களின் இயல்பு. காதலனாக நினைத்து 'கோவை'யால் உருகினார் ஆண்டாள். மற்ற பல உறவு முறைகளில் உருகினார்கள் ஆழ்வார்கள். ஆனால் கண்ணனை 'கண்ணம்மா' எனக் காதலியாய்க் கொண்டு பாடிய முதல் 'புரட்சிக்' கவிஞன் பாரதியார் என்பது பெருமைக்குரியதாகும். கண்ணனை 23 பாடல்களில் போற்றிப் பரவும் கவிஞரின் உள்ளம் இறைவனில் ஆழ்ந்து விடுகிறது.

'கண்ணன்-என் தோழன்' எனக் கூறுகின்ற பாரதி அவனது நட்பு எப்படிப்பட்டது என வினவினால்,

பொன்னவிர் மேனி சுபத்திரை மாதைப்
புறங்கொண்டு போவதற்கே - இனி
என்ன வழியென்று கேட்கி லுபாயம்
இரு கணத்தே யுரைப்பான்

என விளக்குகின்றார். நட்பு - மிகமிக அழுத்தமான நட்பு - எதையும் தரும், எதையும் தியாகம் செய்யும். ஆனால் 'பொன்னவிர் மேனியாளாகிய உன் தங்கையைத் தூக்கிக் கொண்டு ஓடத்துடிக்கிறேன்' என்றொருவன் சொன்னால், கேட்பவன் மனம் தாங்குமா? நட்பு உடனே குலைந்து எரிந்து விடாதோ? அதன் சாம்பரில் மான உணர்ச்சியன்றோ சீறி எழும்? ஆனால் பாரதி காட்டும் நட்பு, சகோதரியைப் புறங் கொண்டு போகத்திட்டமிடும் அதிசய நண்பனுக்கு இரு கணத்தில் உபாயம் கூறுகிறது. அந்த நட்பே இறைவனைத்தொடும் உறவாகி விடுகிறது.

கண்ணனைத் தாயாக பாவிக்கும் பாரதி, அந்த அன்னையின் அருள் வெள்ளத்தை 'அம்மை உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்' என்கின்றார். என்னே அழகான உவமை!

என் தந்தை கண்ணன் பிறந்தது மறக்குலத்தில்; பேதமற வளர்ந்தது இடைக் குலத்தில்; சிறந்தது பார்ப்பனருள்ளே என்பதன் மூலம் இறைவன் சாதி சமய வெறிகளைக் கடந்தவன் என்கிறார் பாரதி. நல் வழியில் செல்பவர்களை மனம் நையும் வரை சோதனை செய்யும் இறைவன் ஏழைகளைத் தோழமை கொள்வான்; செல்வம் ஏறியார் தமைக்கண்டு சீறி விழுவான் என அவனது பண்புகளைப் பாடுகிறார் கவிஞர்.



வருணாசிரமத் தருமம் என்பது நாளடைவில் பிறப்பைப்பற்றி நின்று, இன்று இந்து சமயத்தின் இழிவு நிலையில் இருக்கிறது. இத்தகைய நாலு குல தருமத்தைக் கவிதை என்னும் வாளால் வெட்டுகிறான் பாரதி.

'நாலு குலங்கள் அமைத்தான்; —அதை
நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்'

என்கின்ற பாரதியார் 'போலிச் சுவடிகளையெல்லாம் இன்று பொசுக்கி விட்டா-லெவர்க்கும் நன்மை யுண்டு' என்பதன் மூலம் மூடக்கருத்து மாளிகையின் அடித் தளத்தை அசைக்கின்றார்.

கண்ணம்மா—என் குழந்தை என்று பாசமுடன் தாயன்பைப் பொழியும் பாரதியின் உள்ளம் மகிழ்வில் பொங்கி வழிகிறது. 'பிள்ளைக் கனியமுதே, பேசும் பொற் சித்திரமே' என விளிக்கின்ற பாரதி கண்ணம்மாவின் நிலை மாறினால் தன் நிலையும் மாறுகிறது என்கிறார்.

'உன் கண்ணில் நீர் வழிந்தால்- என் நெஞ்சில்
உதிரம் கொட்டுதடீ.'

என்று பாசத்தின் எல்லையை, உணர்ச்சியின் விளிம்பைத் தொடுகின்றார் பாரதி. தாயன்பன்றோ உலகிலே உயர்ந்த அன்பு? பாரதி பாச மழையால் நனைகிறார்; நாமும் நனைகிறோம்.

கண்ணனைக் காதலனாகப் பாடும்போது, புரட்சிக் கவிஞனாய் சிம்மநாதம் செய்யும் பாரதி பெண்மை போல் மென்மையுடன் விளங்கும் மாயைதான் நமக்குப் புலப்பட வில்லை. கண்ணனைக் காணாத மனத்தை தூண்டிற் புழுவுடனும், சுடர்விளக்குடனும் ஒப்பிடும் பாரதிக்கு பாயின்மிசை தனியே படுதிருக்கையில் தாயினைக் கண்டாலும் சலிப்பு வந்ததாம். இப்படி துன்புற்ற பாரதிக்கு, அவரது கனவில் கண்ணன் வந்து தொட்டவுடன்,

'இச்சைப் பிறந்ததடீ –எதிலும்
இன்பம் விளைந்ததடீ'

என்று தனக்கேற்பட்ட மகிழ்வை அழகாக பாட்டில் வடிக்கின்றார் பாரதி.

கண்ணனைத் 'திக்குத் தெரியாத காட்டில்' தேடித் தேடி இளைத்த பாரதிக்குக் குளிர்ச்சியுடைய மலர்கள் 'நெஞ்சில் கனல் மணக்கும் பூக்களாகக் காட்சியளித்தனவாம். இங்கு வேடனுக்குப் (மாயைக்கு) பெண்ணாகிய பாரதியைக் (உயிரை) கண்டதும் காமம் தலைக்கேறுகிறது. ஆனால் கண்ணனை எண்ணியவுடன் வேடன் மறைந்து விடுகிறானாம். அதாவது பரமபத நிலையை ஆன்மா அடைகிறது. நெரித்த திரை கடலிலும் கண்ணம்மாவைக் கண்ட பாரதியார் நல்ல உயிர் நீ யெனக்கு நாடியடி நானுனக்கு என்று இறைவன் - ஆத்மா உறவை விளக்குகின்றார்.

பாரதி பாடல்களில் பராசக்தி பெற்ற இடத்தை வேறு தெய்வங்கள் பெறவில்லை ஆன்மீக உருவான பராசக்தி நாட்டில் விடுதலை உணர்வை, வீர எழுச்சியைப் பாரதியின் பாடல்கள் மூலம் உருவாக்கினாள். சுகத்தினை வேண்டித் தொழுது, எப்போதும்

அகத்தினில் துன்புற்ற பாரதிக்கு யுகத்திலிலோர் மாறுதலைக்காட்டி வலிமை நெறிக்காட்டி ஆறுதலைத் தந்தவள் பராசக்தி. இறையனுபவத்தைப், பரம்பொருளை அடைய ஊக்கத்தைக் கைக்கொள் என அறிவுரை பகரும் பாரதி 'மண்ணில் தெரியுது வானம் அது நம் வசப்படலாகாதோ?' என்று வினவுவதன் மூலம் பராசக்தியை இடைவிடாது உபாசித்தால் முக்தி கிடைக்கும் என்ற உண்மையைப் புலப்படுத்துகின்றார். பராசக்தியை எங்கே காணலாம் என வினவுவோர்க்கு

'காண்பது சத்தியம் - இந்த
காட்சி நித்தியமாம்'

என்பதே பாரதியின் பதில். காலப் பெருங்களத்தின் மீது எங்கள் காளி நடமாடுகின்றாள் என்கின்ற பாரதி பராசக்தியைக் காணாத இடமேயில்லை. காணி நிலத்தைக் கேட்கும் பாரதி, உருசிய நாட்டுப் புரட்சியையும் பராசக்தியின் அருள் என்கின்றார்.

பராசக்தியை முழு முதற்கடவுளாய்க் கொள்ளும் 'சக்தி' நெறியில் ஒரு கிளை நெறியே 'தாந்தரீகம்.' ஆண்-பெண் சேர்க்கையிலும் இறையருளை, பேரானந்தத்தை எண்ணுவதே இதன் நோக்கம். காலத்தின் கோலத்தால் சிதைவுற்ற இந் நெறியைச் சீர்திருத்துகின்றார் கவிஞர்.

'காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர்
கடவுளினை அவளாலே எய்தல் வேண்டும்'

என்பதன் மூலம் இந்து சமய தத்துவத்தின் ஆழத்தை ஆராயும் பாரதியின் புலமை வெளிப்படுவதோடு, பல பெண்களை நாடாது, மனைவி மூலம் கடவுளை அடைக' என்ற உயர்ந்த ஒழுக்கக் கோட்பாடும் வெளிப்படுகிறது.

கவிதையின் மூலம் இயற்கையின் அழகையும், மனித மனத்தின் அலைகளையும், இவைகளைக் கடந்து நிற்கும் சத்தியத்தையும் காட்டுகின்றார் பாரதி. பாரதியின் பாடல்களின் பெருஞ்சிறப்பு காவிய மணம் வீசும் எளிய வரிகளே! 'எளிமையான இயல்பே கவிதைக்கு உரியது' என்கிறான் மில்டன். கவிச்சக்கரவர்த்தி கம்பரோ சான்றோர் கவி சவியறத் தெளிந்து நிற்கும் என்கிறார். இவர்கள் கூறும் இலக்கணங்களுக்கு இலக்கியம் போல் அமைந்துள்ளன பாரதியின் பாடல்கள். கவிதை என்பது புலமையின் பொழுது போக்கன்று; அது நாட்டு மக்களின் ஆற்றலாக அமையவேண்டும் என்று கருதிய பாரதியின் பார்வையால், 19-ம் நூற்றாண்டில் அரும்பிய எளிமை முற்றிலும் மலர்ந்தது. கவிதைக்கு உயிர் உண்மை. அந்த உண்மையை, நேர்மையை, மக்களுக்குக்கவிதை வடிவில் தந்து வாழ்வின் இலட்சியமாம் பரமானந்தத்தை வளர்த்தார் பாரதி. தமிழகத்தில் கவிதை தெளிந்த விழியோடு, ஆழ்ந்த உணர்வோடு ஆற்றலோடு மறுபடியும் மலர்ந்தது!.



# தாய்க்குலம் உய்விக்க வந்த பாரதி

ம. உமா மகேஸ்வரி,
இளங்கலை இரண்டாம் ஆண்டு.

தமிழ்ப்பணி செய்யவெண்ணி
தமிழ்ப் பாட்டி ஔவையே போல்
புதியதோர் ஆத்திச் சூடி
தமிழன்னைக்கு அர்ப்பணித்தாய்!

தாய்க்குலம் தன்னை மண்ணில்
தள்ளியே மிதித்து நிற்கும்
பேய்க்குல மாக்கள் திட்டம்
பொடிப் பொடியாகச் செய்து
ஆய்ந்த கவிதையாலே
வாழ்வினை யளித்த நல்லோய்
பெண்களும் கல்வி கற்று
பெண்ணுரிமை பேண வேண்டிப்
பண்ணிசைத்துப் பணி புரிந்த
பாரதியே நீ வாழி!

ஆணுக்குப் பெண்ணடிமை
ஆக்குவது நினைத்திடிலோ
அடடா! பெரும்பாவம் என்றாய்
எட்டைய புரத்தோனே.
என்றுமே எம் மகத்தில்
ஒட்டியே இருப்போனே!
நின் நூற்றாண்டு விழா
கிட்டிய இவ்வாண்டிலே
கொண்டாடும் இந் நாளில்
பட்டி தொட்டி யெலாம்
உனை வாழ்த்தி வணங்குவோம்!

# பாரதியார் மணிமொழிக் கோவை

தொகுப்பு: பெ. சு. வரதராசன், M. A., B.O.L., B. T.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்.

## தன்னைப்பற்றி

1. இயன்ற வரை தமிழே பேசுவேன்; தமிழே எழுதுவேன்; சிந்தனை கூட தமிழிலே செய்வேன்.

2. மூடரின் உள்ளத்தில் என்னைப் பற்றிய பொய்யான மதிப்புண்டாக இடங் கொடேன்.

3. சக்தியைக் காக்கும் தந்திரம் பயின்று யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய், யார்க்கும் அன்பாய், யார்க்கும் இனியனாய் வாழ்ந்திட விரும்பினேன்.

4. தெய்வமுண்டு. அது அறிவுமயம். அந்த அறிவுக் கடலில் 'நான்' என்பது ஒரு திவலை. அதற்கும் எனக்கும் ஒரு குழாய் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழாயை ஆணவம் என்ற மாசு மூடியிருக்கிறது. அந்த ஆணவத்தை நீக்கிவிட்டால் தெய்வ சக்தியும், தெய்வ ஞானமும் எனக்குண்டாகும்.

5. அச்சம், கவலை, சிறுமை, திகைப்பு சோர்வு, முதலாக எனக்குள்ளே வாழும் அசுரர்களுக்குக் கணக்கில்லை. இவர்களுக் கெல்லாம் தலைவன் அஞ்ஞானம்.

## அஞ்ஞானம்

6. அஞ்ஞானத்தை வென்றால் தீராத இன்பநிலையெய்தி வாழலாம் என்று சாத்திரங்கள், யுக்தி, அனுபவம்—மூன்று பிரமாணங்களாலும் விளங்குகிறது. எனினும் அஞ்ஞானப் பிசாசையும் அதன் குட்டிகளாகிய காமம், குரோதம், மோஹம், லோபம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறு யம தூதர்களையும் வெல்ல மனிதனுடைய சித்தம் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறது.

7. அஞ்ஞானத்திற்கு 'விருத்திரன்' என்று பெயர். (விருத்திரன்—மூடுவோன், மறைப்போன்) விருத்திரன் - இருள். அவனே தெய்வ இன்பங்களிலிருந்து நம்மைப் பிரித்து வைக்கும் அஹங்காரம்.

## அடிமைத்தனம்

8. மிருகங்களும், பறவைகளும் பிறஜாதி மிருகங்களை, பறவைகளை அடிமைப் படுத்துவதில்லை. சிங்கத்துக்குச் சிங்கம் மற்றொரு சிங்கம் அடிமை கிடையாது. ஒருநாய், ஒரு கழுதை ஒரு நரி, ஒரு பன்றி கூடச் சிங்கத்தின் கீழே அடிமையில்லை.

9 வீட்டில் அண்ணன் தம்பிகளையும், தாய் தந்தையரையும், அக்காள் தங்கைகளையும், பெண்டு பிள்ளைகளையும் அடிமைப்படுத்தி ஆளச் சதி செய்யும் ஜனங்களின் கூட்டங்களே தேசங்களையும் அடக்கி அடிமையாக்கி ஆளச் சதி செய்கின்றன.



10. ஆண்மக்கள் ஒருவர்க் கொருவர் அடிமைபட்டிருக்கும் கொடுமை சகிக்க முடியாது. ஆனால் இதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக் காட்டிலும் பல்லாயிர மடங்கு அதிகக் கஷ்ட நஷ்டங்கள் பெண் கூட்டத்தை ஆண் கூட்டம் அடிமைப் படுத்தி வைத்திருப்பதால் விளைகின்றன.

11. நீயும் அடிமைத்தனத்திலிருந்து நீங்க வேண்டும். உன்னுடைய ஜயபேரிகையை அடித்துக் கொண்டு உலகத்தில் எந்தெந்தப் பாகத்தில் யார் யார் அடிமைப்பட்டிருக்கிறார்களோ அவரவரை விடுவிக்க வேண்டும்.

12. இந்த உலகில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம். பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்.

## அருள்

13. பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே!

14 ஈரமில்லா நெஞ்சுடையார் சிவனைக் காணார். எப்போதும் அருளை மனத்திசைத்துக் கொள்வாய்.

## அலங்காரம்

15. ஒரு தேசத்திலே எல்லோரும் ஒரேமாதிரி அலங்காரத்தை விரும்புவதில்லை சிலருக்கு அலங்காரமாகத் தோன்றுவது சிலருக்கு விகாரமாகத் தோன்றக்கூடும்.

## அறிவாளி

16. அச்சம் இருக்கும் வரை நீ அறிவாளியாக மட்டாய்.

17. எடுத்ததற்கெல்லாம் அஞ்சும் இயல்புடைய கோழையொருவன் தன்னைப் பல சாத்திரங்கள் கற்றவன் என்றும், அறிவாளியென்றும் சொல்வானானால் அவனை நம்பாதே.

## அறிவு

18. எல்லாவிதமான செல்வங்களுக்கும் அறிவுதான் வேர்.

19. அறிவுடையவர்கள் இப்போது பெரும்பாலும் அந்த அறிவை ஏழைகளை நசுக்குவதிலும் கொள்ளையிடுவதிலும் உபயோகப்படுத்துகிறார்கள்.

20. ஈசன் நம்மிடத்தில் அறிவை விளங்கச் செய்கிறான். அறிவே நமது வடிவமாக அமைந்திருக்கிறான். அறிவு இன்பத்தை விரும்புகிறது.

21. ஒன்றை அடக்கு முன்பாக அதன் இயல்புகளை யெல்லாம் நாம் அறிந்து கொள்ள வேண்டும். நம்மால் நன்றாக அறியப்படாததை நாம் வயப்படுத்துதல் முடியாது.

## அன்பு

22. நம்மிடம் பிறர் அன்பு செலுத்த வேண்டும் என்று எதிர் பார்த்துக் கொண்டும் ஆனால் அதே காலத்தில் நாம் பிறருக்கு எப்போதும் மனத்தாலும் செயலாலும்

தீங்கு இழைத்துக் கொண்டும் இருப்போமாயின்—அதாவது பிறரை வெறுத்துக் கொண்டும், பகைத்துக்கொண்டும் இருப்போமாயின் நாம் அழிந்துவிடுவோம் என்பதில் ஐயமில்லை.

23. நேசத்தாலே நேசம் பிறக்கிறது. அன்பே அன்பை விளைவிக்கும்.

24. அன்பின் விதிகளை நன்கு வழக்கப்படுத்தினால் அன்பு நம்மை வளர்க்கும்; நம்மைக் காக்கும்.

25. அன்பே மோட்சம்; அன்பே சிவம்.

26. அன்பில்லாவிடில் மனித வாழ்க்கை நடைபெறாது. வானமும் இயலாது. அன்புதான் இவ்வுலகம் முழுவதையும் சிதறாதபடி ஆதரிப்பது; அன்பு ஒரு நொடி கண்மூடிவிடுமானால் உலகமும், உயிர்களும் அழிந்துபோய்விடும்.

## ஆண் பெண்

27. பெண்ணை அடிமையென்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

28. இன்று தமிழ்நாட்டில் மாத்திரமேயல்லாது உலக முழுவதிலும் பெண்ணைத் தாழ்வாகவும் ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்; அநீதிகளுக்குக் கோட்டை.

## இலக்கியம்

29. உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியஞ் செய்வேன் அந்தச் சக்தியைக் கரித்துணியாலே மூடுகிறான்.

30. இலக்கியத்திற்குத் தெளிவும், உண்மையுமே உயிரெனலாம். இவ்வுயிருடைய வாக்கே அருள்வாக்கென்று சொல்லப்படும்.

## இல்லறம்

31. மணமாலையே பாம்பாக வந்து விழுந்த போதிலும் பதறக்கூடாது. தைரியம் பாம்பைக்கூட மண மாலையாக மாற்றக்கூடும். இவ்விதமான தைரியத்துடன் இல்லறத்தில் நிற்பார் வீடுபேறு பெறுவர். துறவறத்திற்கும் இதுவே வழி. ஆகவே இரண்டும் ஒன்றுதான்.

## இன்பங்கள்

32. இவ்வுலகில் எல்லாவிதமான இன்பங்களும் நமக்கு வேண்டும். அவற்றை வசமாக்குவதற்கு அவசியமான அறிவுத்திறனை நமக்குத்தரும்படி தெய்வத்தைக் கேட்கிறோம்.

33. தன்னைமற—தெய்வத்தை நம்பு—உண்மை பேசு. நியாயத்தை எப்போதும் செய். எல்லா இன்பங்களையும் பெறுவாய்.



34. இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு. கூத்து, முதலிய சுகபோகங்களை அனுபவிப்பது.

35. உயிருள்ள வரை இன்பத்துடன் வாழ அனைத்து ஜீவன்களும் விரும்புகின்றன, இன்பத்துக்கு முதல் தேவை விடுதலை.

36. ஒருவன் ஒருத்தியினிடத்தும், ஒருத்தி ஒருவனிடத்தும் மனத்தாலும், வாக்காலும், செய்கையாலும், கற்பு நெறி தவறாமல் நித்தியம் பற்றுதலுடையோராய் மன ஒருமை யெய்தித் தம்முள் ஆதரவுற்றுத் துய்க்கும் இன்பமே இன்பமெனத்தகும்.

## உயர்ந்தோர்

37. நீதி நெறியினின்று பிறர்க்கு உதவும் நேர்மையர் மேலோர்; கீழவர் மற்றோர். எந்தத் தொழிலையும் நேரே செய்வோர் மேன்மக்கள்.

## கடமை

38. தன்னைக் கட்டுதல்—பிறர் துயர்தீர்த்தல்—பிறர் நலம் வேண்டுதல்—உலகெலாம் போற்றும் ஒருவனைப் போற்றுதல் இந்நான்கே இவ்வுலகில் ஒருவனுக்குக் கடமைகள் எனப்படும். இதன் பயன்கள் நான்காம். அவை, அறம்—பொருள்—இன்பம்—வீடு.

## கவலை

39. கவலைப்படாதிருந்தால் இந்த உலகத்தில் எந்த நோயும் வராது. எவ்வித ஆபத்தும் நேராது. தவறி எவ்வித நோய் அல்லது எவ்வித ஆபத்து நேர்ந்த போதிலும் ஒருவன் அவற்றிற்குக் கவலையுறுவதை விட்டுவிடுவானானால் அவை தாமே விலகிப் போய்விடும்.

## காதல்

40. இன்பமயமான இவ்வுலகத்தில் காணப்படும் எல்லா இன்பங்களைக் காட்டிலும் காதலின்பம் சாலவும் சிறந்தது. அதில் உண்மையும் உறுதியும்கொண்டு நின்றால் அது எப்போதும் தவறாததோர் இன்ப ஊற்றாகி மனித வாழ்வை அமர வாழ்வுக்கு நிகராகப்புரிந்து விடும். காதலுக்குக் கண்ணில்லை என்பது தவறான கருத்து. காதலுக்கு மிகவும் கூர்மையான கண்களுண்டு.

# ஓடி நீ வாராயோ

இராசா. பிரேம் குமார்,
இளங்கலை இரண்டாம் ஆண்டு. (வரலாறு)

பாரதி - நீயே
பாச் சன்னதி
வார்த்தைகள்
வாசலைத் தட்ட
வறுமையைப் புரக் கடையில்
புதைத்தவன் நீயே

நன்ர வண்ண
வெள்ளையர் நாட்டியத்தில்
நடுங்கிய நாடு - உன் முறுக்கிய
மீசையின் முனையில் நின்றது.

தென்றலையே தழுவியிருந்த
தமிழுக்கு,
புயலை அறிமுகம் செய்து வைத்தாய்
விடுதலை போராட்டத்
தீயிற்கு
விறகாய் அமைந்து
கவிதைகளால் - அவர்களின்
கவலைகளைக்
கருவிலேற்றினாய்.

பறந்துவிட்ட குயிலே !
பாரதம் இன்றுனை
வரவேற்கப்
பாதை யெங்கும்
இதய புஷ்பங்களை
இறைத்துள்ளது!

இறைவனிடம் விடுப்புக் கேட்டு
இன்றே நீ இறங்கி வா !
எங்கள்
எண்ணத் தாமரைகள்
உனக்காக ஏங்கி
மலரத் தயாராக யிருக்கின்றன.
உலகமெங்கும்
உனக்காக
ஓரணியாய் நின்று
உரக்கக் கூவுகிறோமே
ஓடி நீ வாராயோ !



# உறவு.

ஹேமலதா,
இளங்கலை முதலாம் ஆண்டு (தாவரவியல்)

சிவசங்கரியின் "மூக்கணங் கயிறு" மதியின் கையில் தொங்கிக் கொண்டிருந்தது. நாலைந்து பக்கங்கள் கூட படித்திருக்க மாட்டாள். மனது மூக்கணங்கயிறு இல்லாமல் தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தது. எல்லாவற்றிலும் ஒரே வெறுப்பு.

'மதி என்ன படிச்சிண்டுருக்கே?'
மலரின் அபத்தமான கேள்வி அவளைத் தாக்கியது. இதற்கு என்ன பதில் சொன்னால் நன்றாகயிருக்கும் ? என்று அந்த கேள்வியை 'அனலைஸ்' பண்ணி அதிலேயே அமிழ்ந்திருந்தாள்; மலரின் வருகையை மறந்தாள்.

'மதி! என்ன பண்ணின்டுருக்கே?' என்ற மலரின் காட்டுக்கத்தலினால் பூவுலகம் திரும்பினாள் மதி.

"ஐயாம் வெரி சாரிம்மா. கேட்டு என்ன பண்ண போற மலர் ?"

சும்மாதான் — இது மலர் "அப்படீன்னா உன் கேள்வியெல்லாம் ? இத்தனை நாள் சட்டையா போட்டுண்டிருந்தது ?"

மலருக்கு ஆயாசமாக இருந்தது. மதியின் இந்த மௌனங்களும் ஆளை அதிர அடிக்கும் பதில்களும் தான் அவளை மற்றவர்களிடமிருந்து வித்தியாசமாக்குகிறது என்று நினைத்துக் கொண்டாள். மலர்.

'டீ மணீ மூணாகிறது, வந்து அரிசி ஆட்டுடி மதி' என்று அலறினாள் மாமி. மலரின் அம்மா — மதியின் மாமி, அவ்வலறல் சிவசங்கரியின் மூக்கணங் கயிறை அதிரடித்தது. மதியை சமையலறைக்கு அனுப்பச் செய்தது.

'ஏண்டி மலர், நேத்திக்கு மதிக்கு லட்டர் வந்தது போலிருக்கே. யார் போட்டுருக்கா ? 'பையனா ? பொண்ணா?' மாமியின் இக்கேள்வியை சகிக்க மனம் இடம் கொடுக்காமையால், காதும் கேட்கக்கூடாது என்ற எண்ணத்தில் அரிசியைக் கடகடவென்று ஆட்டினாள் மதி.

இந்த மாதிரி கேட்க இவளால் மட்டும்தான் முடியும். என்னிக்காவது ஒரு நா நாக்கை புடுங்கற மாதிரி இதற்கு பதில் சொல்லணும் என்று நினைத்துக் கொண்டாளே ஒழிய சொல்லவில்லை. சொல்லியிருந்தால் இடி, மழை, போன்றவைகள், வீட்டில் ஏற்பட்டுயிருக்கும். அவள் படிப்பு இத்துடன் முற்று புள்ளியை கொண்டிருக்கும். அவளின் அம்மாவிற்கு, கணவனைப் (மதியின் அப்பாவை) பிரிந்த இழந்த துயரத்தோடு இவள் துயரமும் சேர்த்துக் கொண்டிருக்கும். "பிச்சை புகினும் கற்கை நன்றே'-என்ற அடிகள் மதியின் மனத்தை நன்றாகவே அடித்துப் போட்டிருந்தன. மாமா-மாமியினுள் அடக்கம்; மாமியினுள் மலர்-அவள் மகள் அடக்கம். மதி? தனி மரம்.

மறு நாள் பள்ளியில், "யார் பிரதருக்க டிரான்ஸ்வராமே ?" என்றாள் அவள் தோழி விசாலி. மதி ஒரு கிருத்துவ பள்ளியில் +2 படித்துக் கொண்டிருந்தாள். "பிரதர்" அந்த சொல்லுக்குதான் எவ்வளவு இனிமை. அதை விட அச் சொல்லுக்குரிய சகோதரர் .. .. இனிமையோ இனிமை. இனிமை டு த பவர் ஆஃப் இன்பினிட்டி மதிக்கு ஒரு அண்ணாவைப் போல், ஒரு அம்மாவை விட மேலாக, அன்பையே அறியாத அவளின் மனத்தினுள் வியாபித்துள்ள அன்பையெல்லாம் அவருக்கே உரியதாக்கி, தன்னுடைய இன்னல்களையெல்லாம் சொல்லி ஆறுதல் பெறும் ஒரு தெய்வமாக அவரை மதித்தாள். அவரை விட்டு பிரிவது என்பது மதியைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய விஷயம். பெரிய விஷயங்களையெல்லாம் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் மதிக்கு வரவேண்டும் என்பது கடவுள் என்ற இடியட்டின் மட்டமான விருப்பம் போலும். நிறைவேற்றினாள். "கடவுள் மனிதனாக பிறக்க வேண்டும்". விளைவு பிரதரின் பிரிவு; மதியின் கண்ணீர். தந்தையில்லாத, ஏழையான, மதிக்கு கண்ணீர் விடுவதைத் தவிர வேறு எதையும் செய்ய தெரியவில்லை. பல துயரங்களை ஆற்றிக் கொள்ள கண்ணீர் தானே அருமருந்து. துயரம் என்ற பயிர்களுக்காக கண்கள் என்ற அணை தேக்கி வைத்திருக்கும் தண்ணீர்தானே கண்ணீர்.

மாதம் ஒருமுறை மதியின் நன்றிக்கு ஆளான ஒரு வஸ்து போஸ்டாபீஸ். ஒரு நாள், விசாலி மதியின் மாமி வீட்டிற்கு வந்திருந்தாள் கையில் பிரதரின் பொன்னெழுத்துக்களையுடைய ப்ளு கவருடன். "மாமி! மதி இல்லையா?" "இல்லையேடி. அவ, அவ அம்மாவை பார்க்க ஊருக்கு போய்விட்டாள்." ஒரு விஷயம் என் ஞாபக சக்தியை மட்டமாக்கிடுத்து. ஐயாம் வெரி சாரி. ic ஐமீன் மதிக்கு அப்பா ஆப்சென்ட் அம்மா ப்ரசென்ட் வித்தவுட் மணி பட் வித் லவ். படிப்பிற்காக மாமி வீட்டில் நிழல் போன்று தங்கியிருக்கிறாள் மதி. மாமி மற்றவர்களின் துன்பத்தில் மகிழ்ச்சியைக் காணும் ஒரு சாடிஸ்ட். இலக்கானவள் மதி. ஆ! எங்கேயோ தொடங்கி எங்கேயோ போயிடுத்தே. விசாலி B. L. யோடு வந்தாள்; மாமியிடம் சொன்னாள்; பாவம் அவளையறியாமலே டேல்டெல்லிராயிட்டா விசாலி "எழுதி செல்லும் விதியின் கைகள் மாறுமோ?". அடுத்து, இரண்டு நாட்களுக்கு பின் மதி வந்தாளா ? [வந்து தொலைந்தாள்]. வந்ததும்,

"ஏண்டி! பாவாடைக் கட்டிங்க கூட உங்களுக்கு பாடம் நடத்தறாளா?" 'மாமி! பிரதர்களையெல்லாம் ஏன் இப்படி கேலிபண்ணறீங்க ?' 'ஆமாண்டி! நான் தான் கேலி பண்றேன். உன்னைப் பார்த்து ஊர் உலகம் எல்லாம் கேலியா சிரிக்கிறதே அது தெரியாது உனக்கு. எவனையாவது பார்த்து பல்லை காண்பித்து இருப்பே. அதான் அவன் லட்டர் லட்டரா எழுதறான்" என்று கத்தியபடி லட்டரை மதி முன் தூக்கி எறிந்தாள்.

மதி என்ற எரிமலை வெடித்தது. "மாமி! வாயை டெட்டால் போட்டு அலம்புங்க. உங்க மனசைத்தான் ஒன்றுமேயில்லாம நிர்வாணமாக வைச்சிட்டு இருக்கீங்க. ஆனா என்னாலே முடியாது. அன்பு, பாசம் என்ற உடைகளை அத்தியாவசமாக வேண்டியிருக்கு என் மனசுக்கு. ஒரு தூய்மையான அன்பை களங்கப்படுத்தற உங்களை மனித ஜென்மம் என்று சொல்லறத்துக்கு வெட்கப்படுங்க" என்று; கடுகு கணக்காய், அதுவும் காய்ந்த எண்ணெய்யில் போட்ட கணக்காய் வெடித்தாள் [வெடித்தாளா?].



good bye கூறினாள் [கூறினாள்]. ஒரு விஷயம்! முதலில் தென்றலாய் வந்தவள் இடையினில் புயலாக மாற்றப்பட்டவள்; இறுதியில் காற்றாய், வெறும் காற்றாய் போனவள் இப்பெண்.

---

# ஓரத்தில் நின்று கொள்

**த. அ. பாலசுப்ரமணியன்,**
இளங்கலை இரண்டாம் ஆண்டு, வரலாறு.

பாரதியே, நீ
நடந்து வந்த
பாதைகளில்
தட முட்களையே
மிதித் திருந்தாய்!

வாழ்க்கைப் போராட்டத்திலும் - அன்னைத்
தாள்களையே தாங்கியிருந்தாய்!
காய்ந்த வயிற்றினிலும்
கனவுகளையே நிரப்பியிருந்தாய்.
இந்தியாவில் பிறந்ததால்
ஏழ்மைச் சிலுவையைச்
சுமந்திருந்தாய்!

இன்று உன் கனவுகளெல்லாம்,
கானலாகிக் கொண்டிருக்க
நன்று உன்
கவிதைகளுக்கு மட்டும்
கவரி வீசப் படுகின்றது.

145561
சென்னை-600 008.

# பாரதியின் காவடிச் சிந்து.

ரா. முருகன்,
மூன்றாம் ஆண்டு, கணிதம்.

அண்ணாமலை ரெட்டியாரின் புகழ் பெற்ற காவடிச் சிந்தைப் போல பாரதியும் ஒரு காவடிச்சிந்து எழுதினார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அப்பாடல் முழுதும் நமக்குக் கிடைக்கவில்லை. சில வரிகள் காவடிச்சிந்து போல்வன என சொல்லப் படுகின்றன. அவ்வரிகள் வருமாறு :

பச்சைத் திருமயில் வீரன்
    அலங் காரன், கௌமாரன்—ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன்—அடி
    பணி சுப்பிர மணியர்க் கருள்
அடி மிக்குயிர் தமிழைத் திரு
    பக்தர்க் கெளியசிங் காரன்—எழில்
பண்ணுறு மருணாசலத் தூரன்.

பாரதியின் பாடல் தொகுப்பில் தோத்திரப் பாடல்களில் இரண்டு காவடிச் சிந்தைச் சேர்ந்த கிருதிகளாயிருக்குமோ என்று யாரும் ஐயங்கொள்ளாமலிருக்க முடியாது. உண்மையில் அவை காவடிச் சிந்தைச் சேர்ந்தவையே என்பது இக்கட்டுரையின் விடையாகும்.

சின்னசங்கரன் கதை தொலைந்து போனபின்னர் தோழர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி மீண்டும் எழுதினார். அச்செயல் பெரும் பாராட்டுதலுக்குரியது. தொலைந்து விட்ட உரைநடை நூலை அப்படியே வரிக்குவரி எழுதியிருக்க முடியுமா? வேறு பல மாற்றங்களும் பின் சேர்ந்திருக்கக் கூடும். ஆனால் தொலைந்து போனது கவிதை நூலென்றால் சில பாடல்களாவது மனனத்திருந்து அடிமாறாமல் கவனப்படுத்த இயலும்.

நாமறிந்த செய்திகளிலிருந்து அக்காவடிச் சிந்து நூலைப்பற்றி பாரதியிடம் வினவவில்லை எனத் தெரிகிறது. ஒருவேளை கேட்டவர் உலகுக்கு விவரம் தரவில்லை எனலாம். ஆராய்ந்தால் யாருமே கேட்கவேயில்லை என்பது புலப்படும். சின்னசங்கரன் கதைஎழுதப்படும்பொழுது உடனிருந்தவர்வேறு, காவடிச்சிந்து இளமைக்காலத்திலோ இடைக்காலத்தில் எட்டையபுரத்தில் பாடப்பட்டது என்பதன் மூலமறியலாம். சின்னசங்கரன் கதையை மீட்டும் எழுதியவர் காவடிச் சிந்தை எழுதாததேன். அதற்கு இரண்டு காரணங்கள் மட்டுமே இருக்கமுடியும். பின்னர் எழுதிக் கொள்ளலாம் (புதிதும் செய்யலாம்) என்று நினைத்திருக்கலாம், சில பாடல்கள் இருக்கின்றனவே (தெரியுமே?) எப்போதேனும் முழுமை படுத்திக் கொள்ளலாம் என்று விட்டிருக்கலாம். முதல் காரணம் தள்ளத்தக்க அளவிற்குச் சாதாரணமானது. இரண்டாவது மிகவும் நுணுக்கமாய் அணுக வேண்டியுள்ளது. அணுகலின் விடை நிச்சயம்: இரண்டாவதுதான் உண்மை. காவடிச் சிந்தைச் சேர்ந்ததாய் இருக்க வேண்டிய பாடல்கள் என நினைப்பூட்டுவன வள்ளிப்பாட்டு—1, 2. ஆகியனவே. வள்ளிப்பாட்டு—1 நிச்சயமாய்



காவடிச் சிந்தைச் சேர்ந்ததே. அப்பாடலை எடுத்துக் கொள்வோம் எவ்வகையிலும் மறுக்க வைக்காதவாறு அதன் சிருங்காரமும், சந்தமும் காட்டுகின்றன அடையாளத்தை. வள்ளிப் பாட்டு—2 முழுமையான பாடலா என்று ஐயப்பட வைக்கிறது. வள்ளிப் பாட்டைத் தனியேயெடுத்து ரெட்டியாரின் காவடிச் சிந்துடன் ஒப்பிட்டு நோக்கினால் அதற்கிணையான சொல்லாடலும், சந்த நயமும் சிருங்கார ரசமும் தேர்ந்து மிளிர்கிறது. வள்ளியுடன் கூடல் விரும்பலும் கலவின்பத்தை உரைப்பதும் போன்ற காரணங்களே போதுமானதாகும்.

கண்ண(ம்மா)ன் பாட்டுக்கும், வள்ளிப் பாட்டுக்கும் அமைவு, கருத்து வடிவில் பெருத்த வேறுபாடு நிலவுவது தெளிவு. பாரதி காவடிச்சிந்து யாப்பில் பல பாடல்கள் எழுதியுள்ளார். அவை அத்தனையிலும் வள்ளிப்பாட்டிற்கான சந்த, அமைவு நயத்தைக் காண இயலாது. பாரதியின் காவடிச் சிந்தைச் சேர்ந்ததெனச் சொல்ல வள்ளிப் பாட்டே போதுமானது. முருகன் பாட்டும், வேலன் பாட்டும் வியப்பை வெளிப் படுத்துவன. கிளிவிடுதூது பிற்காலப் பாட்டே என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

மேற்சொன்னவைகளிலிருந்து வள்ளிப்பாட்டு 1, 2 ஆகியன சேர்த்தாலும் மூன்று பாடல்களுக்கு மேல் கிடைக்கவில்லையே என்று ஆதாரம் கொள்ளவும் மனம் நோகவும் செய்கிறது. ரெட்டியாரின் காவடிச் சிந்தில் நயம் பருகிப்பருகி; உருகி, உருகி இருப்பவர் அதற்கிணையான இன்னொன்றை இழந்து வள்ளிப் பாட்டை மட்டுமே கண்ணீர் தளும்ப கைக்கெட்டாமல் போன மற்ற பாடல்களை எண்ணி காலத்தை—சபித்தலை ஒரு முறையேனும் செய்யாமல் ஆறுதல் கொள்வாரோ?

# விளக்கு

பு. முனியப்பன்,
இடையாண்டு விலங்கியல்.

தாமரையின் நூலெடுத்து
    தனிப்பசுவின் நெய்யுருக்கி
ஏற்றிவைத்த நெய்விளக்கு!
    ஏறிநின்ற விடிவிளக்கு!

ஏழைகளின் நீர்துடைக்க
    அவதரித்த குலவிளக்கு!
பாட்டாலே புரட்சிசெய்த
    பாரதத்தின் தலைவிளக்கு!

குழந்தைகளின் கொலுவிளக்கு!
    உலகெங்கும் போற்றும் தனிவிளக்கு!
ஏழைகளின் விடிவிளக்கு!
    அணையாத ஒளிவிளக்கு!

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

இரா. நந்தகுமார்,
மூன்றாம் ஆண்டு (தமிழ் இலக்கியம்)

ஒரு குலத்தார் என்றோ, ஓரினத்தார் என்றோ இந்திய நாட்டு மக்களுக்குச் சென்ற நூற்றாண்டு வரை நினைவு இருந்ததில்லை. பெரும்பாலான மக்களுக்குச் சமய உணர்வு காரணமாக, ஒருவகை உணர்ச்சிபூர்வமான, ஒருமைப்பாட்டுச் சிந்தனை இருந்தது. தெற்கே இருந்தவர்கள் வடக்கே காசிக்கும் கைலாயத்துக்கும் யாத்திரை செய்தார்கள் வடக்கே இருந்தவர்கள் ராமேஸ்வரம்— தனுஷ்கோடி வரை சென்றனர்.

அரசியல் ரீதியாகவும் பொருளாதார-சமூக ரீதியாகவும் இந்த நாடு அங்கதம், வங்கம், கலிங்கம், ஐம்பத்தாறு தேசங்கள், தெற்கே சேரர் சோழர், பாண்டியர், மற்றும் பலப்பல குறுநில மன்னர்கள்; இப்படியே நாடெங்கிலும், "ஊருக்கு ஒரு ராஜா" என்ற முறையில் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். நாடு விடுதலை பெற்ற போது கூட, இங்கே ஐநூற்றுக்கு மேற்பட்ட சிற்றரசர்கள் இருந்ததை நாம் மறுப்பதற்கில்லை.

இவர்களுக்குள் நடந்த ஓயாத ஒழியாத போர்களைத்தான், வரலாறு நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. இவர்களிடையே ஏற்பட்ட போராட்டங்களின் விளைவாக இங்கே மொகலாயர்கள் வந்தார்கள்; போர்த்துக்கீசியர்கள்; டச்சுக்காரர்கள்; பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்கள் வந்தார்கள்.

நாம் அடிமைப் பட்டோம்; அவதிப்பட்டோம்; சுரண்டப்பட்டோம்.

இந்த அடிமைத் தனத்துக்கும் சுரண்டலுக்கும் எதிராக நாம் திரண்டு எழுந்த போதுதான், நமக்குள் ஒற்றுமையும் உறுதியான ஒருமைப்பாட்டுணர்வும் தேவை என்ற எண்ணமே நமக்கு ஏற்பட்டது.

சாதிகள், சமயங்கள், குலங்கள், இனங்கள், மொழிகள், என்ற பெயரால் பிரிந்து நின்றால், நம்மால் விடுதலை பெற முடியாதென்பதையும் புதிய இந்தியாவை உருவாக்க முடியாதென்பதையும் நாம் உணர்ந்தோம்.

இந்த விழிப்பு நமக்கு ஏற்பட்ட காலம் இந்த நூற்றாண்டின் தொடக்ககாலமாகும். இது புதிய விழிப்புத்தான்; ஆனால் வரவேற்புக்குரிய விழிப்பு. அரசியல்—பொருளாதார சமூக ரீதியான ஒருமைப்பாடு ஒன்றுதான் இந்த நாட்டை வாழ வைக்கும் என்பதை அன்றைய தலைவர்கள் நன்குணர்ந்தார்கள்.

வடக்கே வங்காளத்திலும், பாஞ்சாலத்திலும் அதிதீவிரமாக தலைதூக்கிய இந்த ஒருமைப்பாட்டு உணர்ச்சியை முதன் முதலாகத் தமிழகத்துக்குக் கொண்டு வந்து தம் கவித்திறனால் புயல் வேகத்தில் பரப்பியவர் மகாகவி பாரதி. அது மட்டுமல்ல; இந்தியாவிலேயே வேறு எந்த மொழிக்கவிஞரும் பாடாத அளவுக்கு ஆற்றலோடு ஒருமைப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தியிருப்பவர் பாரதி.



'வந்தே மாதரம்' என்ற அவருடைய கவிதையே இதற்குச் சான்று.

அக்காலத்தில், 'வந்தே மாதரம்' என்று முழங்கக்கூடாது என்று வங்க மாநிலத்தரசு தடை விதித்திருந்தது. அதை மீறிக் கூறியதால் பலர் சிறைக்குச் சென்றார்கள். 'நாம் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்; ஆகவே நம் நாட்டுத் தாயை வணங்குவோம்' என்பது அதன் பொருள்.

எந்தச் சொல்லைச் சொல்லக்கூடாது என அரசு தடைவிதித்ததோ, அந்தத் தடையை மீறி அதைச் சொல்வோம் என்பது போல்,

"வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத்தாயை வணங்குதும் என்போம்"—என்கிறார் கவிஞர்.

சாதிகள் சமயங்களைப் பார்க்க மாட்டோம்; வேதியராயினும் ஒன்றுதான்; வேறு குலத்தினராயினும் ஒன்றுதான்; இந்த தேசத்தில் பிறந்தவர்கள் அனைவருமே உயர்ந்த பிறவிகள் தான் என்கிறார்.

ஏனென்றால் அன்றும் சரி, இன்றும் சரி, நம் சமுதாய வாழ்வைச் சீரழித்து வரும் மிகப்பெரிய கொடுமை சாதிக் கொடுமையே மக்கள் கூட்டத்தைச் சிறுசிறு குழுவாகப் பிரித்து, உறவு கொண்டு ஒற்றுமையை வளர்க்க விடாமல் செய்வது இந்த சாதிப்பிரிவினை தான். எல்லா மாநிலங்களிலும் இன்றும் நாம் இந்தச் சாதிப் பூசல்களின் வேண்டாத விளைவுகளைக் கண்டு வருகின்றோம்.

எனவேதான், இந்த நாட்டில் சாதி வெறி தலை தூக்கி நின்ற அந்தக் காலத்-திலேயே அவருடைய பாடல்கள் வாயிலாகவும், கட்டுரைகள் வாயிலாகவும் சாதியைச் சாடுவதற்கு அவர் தயங்கவில்லை—"சாதிகள் இல்லையடி பாப்பா!" என்று குழந்தைகளுக்கு எடுத்து ஓதுகிறார். வருங்காலச் சந்ததியாவது இந்தக் கொடுமையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற துடிப்புதான் அவரை இவ்வாறு பாடச்செய்கிறது.

சாதி வெறியைப் போலவே இன்று சமய வெறியும் ஒருமைப்பாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. எனவே தான் "சாதி மதங்களைப் பாரோம் என்கிறார். மதத்தின் பெயரால் நாடு பிரிக்கப்பட்டு, இதற்குள் மூன்று போர்களை நாம் சந்தித்து விட்டோம். இப்போது சீக்கிய மதத்தின் பெயராலும், பிரிவினைக் கிளர்ச்சிகள் தோன்றியுள்ளன. பாரதி பிறந்த மண்ணோ மொழியின் பெயரால் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகி நிற்கிறது.

இத்தகைய பிரிவினைகளைத் தவிர, மற்றொரு அடிப்படைப் பிரிவினை, நம்முடைய நாட்டின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் ஏற்பட்டு வரும் பிரச்சனைகளுக்கும் நம்முடைய பொருளாதார அமைப்புகளுக்கும் கூட நெருங்கிய தொடர்பு உண்டு.

நாட்டின் உண்மையான ஒருமைப்பாடு ஓங்கி வளர வேண்டுமென்றால், பாரதி கூறுவது போல்,

"எப்பதம் வாய்த்திடு மேனும்
நம்மில் யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும்"

என்ற நிலை வரவேண்டும்.

"முப்பது கோடியும் வாழ்வோம் – வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்"

என்ற நிலை வரவேண்டும்.

மகாகவி பாரதியின் காலத்தில் மக்கள் தொகை முப்பது கோடி. இப்பொழுது எழுபது கோடி. இந்த எழுபது கோடியும் அச்சமற்று வாழும் சூழ்நிலைதான் தேசிய உணர்ச்சியும், ஒருமைப்பாட்டு உணர்ச்சியும் வளர்வதற்கான ஆரோக்கியமான நிலை.

நம் நாட்டில் ஏராளமான இயற்கை வளங்கள் இருக்கின்றன. நீர் வளம், நிலவளம், கனிவளம், தொழில் வளத்துக்கும் பஞ்சமில்லை.

"இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெரும் நாடு
கனியும் கிழங்கும் தானியங்களும்
கணக்கின்றித் தருநாடு - இது
கணக்கின்றித் தருநாடு—நித்தம் நித்தம்
கணக்கின்றித் தருநாடு"

இப்படி இருந்தும் 50 விழுக்காடு மக்கள் ஏன் வறுமையில் வாட வேண்டும்? கல்வியில்லாமலும்; வேலை வாய்ப்பில்லாமலும், உழைக்க முடியாமலும், பிழைக்க முடியாமலும் ஏன் திண்டாட வேண்டும்? ஏன் போதிய உணவில்லாமல், உடையில்லாமல், உறைவிடமில்லாமல் அவதிப்பட வேண்டும்?

"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?"

இப்படிக் கேட்கிறார் பாரதி. நாம் பதிலளிக்கிறோம்.

உண்டு! இந்த நாட்டில் ஏராளமான வழிகள் உண்டு.
தாராளமாக உண்டு! என்று பதிலளிக்கிறோம்.

ஐந்து நட்சத்திர ஓட்டல்களிலே ஒருவேளைச் சாப்பாட்டுக்கு 50 ரூபாய்க்கு மேல் கொடுத்துச் சாப்பிட வசதி உள்ளவர்கள் பலர் இந்த நாட்டிலே உள்ள போது, மாத வருமானம் 50 ரூபாய் கூடக் கிடைக்காதவர்கள் பலகோடிப் பேர் இங்கு வாழ்கிறார்கள்.

கந்தலைக் கசக்கிக் கட்டினால் கிழிந்து போகும் என்று அஞ்சக்கூடிய மக்கள் வாழும் நாட்டில், ஜவுளிக் கடைகளையே தங்கள் அறைகளுக்குள் பூட்டி வைத்திருக்கும் 'பெரு' மக்களும் இங்கு நிறைந்திருக்கிறார்கள்! நடைபாதைகளையே தங்கள் வீடுகளாக மாற்றி வாழும் மக்கள் கூட்டம் நிரம்பிய நாட்டில், தெருக்களையே அடைத்து அரண்மனைகளைப் போன்ற மாளிகைகளை எழுப்பி வாழ்வோருக்கும் பஞ்சமில்லை!



மலைக்கும் மடுவுக்குமிடையே காணப்படுவது போன்ற இந்தப் பொருளாதார வேறுபாடுகள் நாட்டின் ஒருமைப்பாட்டு உணர்ச்சிக்கு முற்றிலும் எதிரானவை மட்டுமன்று; முரணானவையும்கூட. நிரம்பிய வயிற்றில் தான் தேசிய உணர்ச்சியின் வித்து ஊன்றி முளைக்க முடியும். நீதியும் நியாயமும் கொண்ட பொருளாதார அமைப்பில்தான் ஒருமைப்பாட்டு உணர்வு உயர்ந்தோங்க முடியும்.

பொருளாதாரத் துறையில் மிகவும் வளர்ந்து விட்ட நாடுகள் வளர்ந்துவரும் நாடுகளுக்கு உதவி செய்வதில்லை என்று நாம் குறைப்பட்டுக் கொள்ளுகிறோம். அதே சமயம் நம் நாட்டு ஏழைகளுக்கு நம்மில் வசதி மிகுந்தவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை மறந்து விடுகிறோம். செல்வம் ஒரேபக்கம் அதிகமாகச் சேர்ந்து வருவதையும் மறுபக்கம் பள்ளம் அதிகமாக விழுந்து வருவதையும் தடுக்க நாம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

"இனியொரு விதி செய்வோம்-அதை
எந்த நாளும் காப்போம்;
தனி யொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்!"

—என்றார் பாரதி.

நாம் ஜகத்தினை அழித்திட முயல வேண்டும்!

இந்த நாட்டில் உள்ள பல கோடி மக்களின் பசியை ஒழித்திட முயற்சிகள் செய்வோம். பசியும், பட்டினியும் இருக்கும் நாட்டில் மற்ற எந்தச் சாதனையும் கேலிக் கூத்தான சாதனைகளே.

நாட்டின் அடிப்படைச் சாதனை, முதல் சாதனை, அதன் மக்களைப் பசியற்றவர்களாக வாழச் செய்வதே.

எல்லாச் சாதியாரிலும், சமயத்தாரிலும், இனத்தாரிலும், மொழியாரிலும், மாநிலத்தாரிலும் பசித்தவர்கள் மிகுந்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

இதைச் சாதிப்பதற்காகவே நாம் முதலில் ஒன்றுபடுவோம்!
ஒருமைப்பாட்டை வளர்ப்போம்!
வெற்றி பெறுவோம்!

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே!
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தால் பின் நமக்கெது வேண்டும்?"



# பாரதியாருக்குக் 'கோடி' ஆசை!

ப. [illegible], M.A.,
தமிழ் உதவிப் பேராசிரியர்.

39 ஆண்டுகள் வாழ்ந்த முழுமையான மனிதர் எட்டயபுரக்கவி பாரதி, தம் 865 கவிதைகளில், 'எண்ணுப்பெயர்களை எடுத்தாண்டுள்ளார். எண்ணு முறைப் பெயர்களை அவ்வளவாக பயன்படுத்தவில்லை இவரது பாக்களில் அதிக எண்ணிக்கையில் எண்ணப்படதக்க வகையில், 'ஆயிரம்'; 'கோடி' இவை இரண்டும் இடம் பெறுகின்றது.

பாரதிக்கு 'கோடி' என்ற எண்ணே மிக விருப்பம் போலும். மற்றைய எண்களையும் ஓரளவு எடுத்தாண்டாலும் பெரும்பான்மையான எண்களை எடுத்துக் கொள்ளவில்லை; பயன்படும் எண்களாவன :

ஒன்று : 'ஒன்று' என்ற எண்ணை; 'ஓர்' என்ற முறையில் அதிக அளவில் பயன் படுத்தியுள்ளார். இவ்வெண்ணை ஆளவேண்டிய நிலைமையைக் காண முடிகின்றது.

இரண்டு : இதைச் சிறிதளவே கையாண்டுள்ளார்;
இறைவன்-இறைவி; கண்கள்; கைகள்; இமைகள் இவைகளைக் குறிக்கவே குறித்துள்ளார்.

மூன்று : இவ்வெண்; முக்காலத்தையும்; சிந்தைக்குக் கூறுவதற்காகவும்; மூவுலகையும்; முக்கடவுளரையும்; மூன்று குலத்தமிழ்; இவற்றைத் தெரிவிக்கக் காண்கிறோம்;

நான்கு : கடவுளைக் குறிக்கவும்; நாற்பொருளையும்; நாற்கரத்தையும்; நான்கு வகுப்பையும்; நான்கு நாளையும்; மாடன் இரண்டு கால்களால் விரைந்து செல்வதைக் குறிக்க. 'ஈரிரண்டு பாய்ச்சல்' என்றும்; நான்கு திசைகளை நல்கவும்; நவில்கின்றார்.

ஐந்து : ஐந்து தலைப்பாம்பு; ஐந்து நன்மணி; ஐவர் (பஞ்சபாண்டவர்) ஐம்பூதம்; இவைகளைச் சுட்டப் பயன்படுத்துகின்றார்.

ஆறு : "ஆறுசுடர் முகம்" என இறைவனைக் குறிக்க மட்டுமே நிறுவியுள்ளார்.

ஏழு : ஏழ்கடலையும்; 'ஏழுகணப் பொழுதில் இறைவனை வரச்செய்வேன்' (பாஞ்சாலி) என்ற 2 இடத்தில் மட்டுமே கூறுகின்றார் என்றாலும், ஆறு ஏழு என எண்ணுடன் சேர்த்தும் கூறுகிறார்.

எட்டு : எட்டுத் திசையைக் குறிக்க மட்டும் பயன்படுத்துகிறார்.

ஒன்பது : சிறுமியின் வயதைக்குறிப்பதற்கும்; மனிதனை ஒன்பது வாயில் குழல் எனவும்; மணிகளைக் குறிக்க 'நவ' என்ற சொல்லையும் சொல்லியுள்ளார். தர்மன் சூதாடும் பொழுது, பணயப் பொருள் 1க்கு, ஒன்பதாக வைக்கப் பயன்படுத்துகிறார்.



பத்து : புசம்; பிராயம்; மாற்றுப் பொன்; படை; சிறுவர்: தென்னைமரம் இச் சொற்களுக்கு முன் மட்டுமே சுட்டுகின்றார்.

பன்னிரண்டு : ஆண்டினைக்குறிக்கவும்; நாட்களைக் குறிக்கவும்; இறந்த நாள் விசேசம் விமர்சிக்கவே வைத்துள்ளார்;

பதினென்கு : 'உலகத்தை' 'ஏழிரு புவனம்' என்பதனைச்சுட்ட மட்டுமே வரைந்துள்ளார்.

பதினறு : வயது16 இருக்கும் இளவயது மங்கையை மட்டும் விளக்கப் பதிந்துள்ளார்.

பதினெட்டு : மொழியை மொழிந்திட, மட்டுமே மொழிகின்றார்.

இருபது : இருபது பேய் கொண்டவர் போல என உவமைக்காக உவமிக்கின்றார்.

27 : இந்த மெய்யும் கரணமும், பொறியும்
27 வருடங்கள் பார்த்தேன் என்ற ஒரு இடத்தில் கூறுகிறார்.

40 : 40 அரசர்களை அறிவிக்க ஆண்டுள்ளார்.

66 : பாரதி- 66 என்ற தலைப்பில் கவிதையே எழுதியுள்ளார்.

75 : '75 ஆண்டில் ஒரு முறை' என்றொரு இடத்தில் பார்க்க முடிகின்றது.

80 : 'எண்பதின் மேல் வயது' என வலியுறுத்தவே மட்டும் பயன்படுத்துகிறார்.

100 : வயதைக் குறிக்கவும்; தேசத்தையும்; நூல்களையும்; ஜாதியையும்; ஆண்டையும்; நீதியையும்; நூருக்கி நூற்கின்றார்; சுமார் 12 இடங்களில் இயம்புகின்றார்.

102 : 102 மலைகளைச் 'சாடும்' எனச்சாற்றுகிறார்.

500 : 'வாதம் ஐநூறு வாயில் ஒது வாய்' என ஓரிடத்திலே மட்டும் வாய்ப்பக் காட்டுகின்றார்.

1000 : ஏறத்தாழ 30 இடங்களில் இயம்பியுள்ளார் காதல்; ஆண்டு; நூல்; தொல்லை; சூழ்ச்சி; காலம்; தொழில்; சத்திரம் மடங்கு; புண்; எண்ணம்; நீதி; புதுமைகள்; முடிவேந்தர்; யுகங்கள்; யானை; தெய்வம்; வேதங்கள்; சாதி; இவற்றின் முன் பின்னுக வந்துள்ளதைப் பார்க்க முடிகிறது.

1756 : விக்ர ஆண்டினை அறிவிக்கிறார்

2000 : '2000 காக்கைக்கு இரையிட்ட' என்று பகர்கிறார்.

4000 : 'பணக்குவை' என எழுதுகின்றார்.

5000 : 'ஆண்டைக்' குறிக்க கூறுகிறார்.

8000 : 8000-ங்கால் முறையிட மொழிந்துள்ளார்.

10,000 : குறுநிலத்தாரையும், சனி வாயையும் இவ்வெண்ணிக்கையில் பகர்கிறார்

40, 000 : கோயில் சொல்வேன்; எனச் சொல்லுகின்றார்.

1,00,000 : தொண்டரைச் சொல்ல, சொல்லும் எண்;
மேலும் சிலவிடங்களில், ஆயிரம என்ற எண்ணை
'எத்தனை ஆயிரம்' எனவும் விளிக்கின்றார்.

லட்சம் : கண்ணுக்குத் தெரியாத சிறியஜந்துக்கள் எண்ணிக்கையாக இதனைச் சுட்டுகின்றார் ஓரிடத்தில் மட்டும்.

1 கோடி : 'தென் தமிழ்ப் பாடல் ஒருகோடி மேவிடச் செய்வோம்'என எண்ணுகிறார்; கோடி நாள்; கோடி நலம்; கோடி அண்டம்; பிரிவினைகள் ஒரு கோடி. கோடி மக்கள்; கோடி முறை மனிதர் சினத்தில் வீழ்வார்; மதங்கள் கோடி; கோடியின்பம்; கோடி மேன்மை; கோடி அதிசயங்கள்; என்று, மிகுதிப்படுத்திப் பகர இவ்வாறு சொல்லுகிறார்.

3 கோடி : வருடத்தைக் குறிக்கிறார்.

4 கோடி : சூதாட்டத்தில், தருமன், நாலு கோடி வைத்ததாகக் கூறுகிறார்.

7 கோடி : 7 கோடி வாய் முழக்கம், என்கிறார்.

10 கோடி : இடி வானத்து ஒளி மின்னலை, இவ்வெண்ணிற்கு விரிக்கிறார்.

30 கோடி : 30 கோடி முறை உரைத்ததை உணர்த்தவும்; ஜனங்களைக் குறிக்கவும். பகர்ந்துள்ளார்.

32 கோடி : பாரத வீரர் 32 கோடி என்கிறார்.

60 கோடி : பெரிய கைகள் 60 கோடி எனவும், 60 கோடி தோள் எனவும் கோடிட்டு கொள்கின்றார்.

100 கோடி: நூலைக் குறிக்கிறார்.

1000கோடி: அறிஞர்கள் என அறிவித்துள்ளார்.

40 ஆயிரம் கோடி : கலைகளிருப்பதாகக் கதைக்கிறார்.

இவ்வாறு அளவுகளை அளந்தவர், சிலவிடங்களில், பல்லாயிரம் கோடி; ஸப்த கோடி; கோடி, கோடி; சாத்திரங்கோடி, பல்கோடி; தந்திரங் கோடி, மந்திரங் கோடி எத்தனைகோடி, பலபலப் பலபற்பல கோடி; அறிந்தவர் கோடி; வாத்தியங் கோடி; மதியில்லாதவர் கோடி; கோடி, கோடி கோடி யோஜனை என்று எடுத்தியம்புகின்றார்.

சுமார் 45 இடங்களில், 'கோடி' என்ற எண்ணைக் கோக்கின்றார். கோடியில் ஒருவராகப் பிறந்த பாரதிக்கு 'கோடி' என்ற எண்ணே விருப்பமான எண் எனலாம்.



# மூட பக்தி†

—மகாகவி பாரதியார்.

நம்முடைய ஜனங்களுக்கிடையே இந்த நிமிஷம் வரை நடைபெறும் மூட பக்தி களுக்குக் கணக்கு வழக்கே கிடையாது. இதனால் நம்மவர்களின் காரியங்களுக்கும் விவகாரங்களுக்கும் எற்படும் விக்கினங்களுக்கு எல்லை இல்லை.

இந்த மூட பக்திகளிலே மிகவும் தொல்லையான அம்சம் யாதெனில், எல்லாச் செய்திகளுக்கும் நாள் நக்ஷத்திரம், லக்னம் முதலிய பார்த்தல், சவரம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றால், அதற்குக்கூட நம்மவர் மாஸப் பொருத்தம், பக்ஷப் பொருத்தம், திதிப் பொருத்தம், நாட்பொருத்தம் இத்தனையும் பார்த்தாக வேண்டி யிருக்கிறது. க்ஷவரத்துக்குக் கூட இப்படியென்றால், இனிக் கலியாணங்கள், சடங்குகள், வியாபாரங்கள், யாத்திரைகள், விவசாய ஆரம்பங்கள் முதலிய முக்கிய காரியங்கள், பல்லாயிரநின் விஷயத்திலே நம்மவர் மேற்படி பொருத்தங்கள் பார்ப்பதில் செலவிடும் கால விரயத்துக்கும் பொருள் விரயத்துக்கும் வரம்பே கிடையாது. சகுனம் பார்க்கும் வழக்கமும் கார்யங்களுக்குப் பெருந்தடையாக வந்து மூண்டிருக்கிறது. இதில் நேரும் அழிவுகளும், அவற்றால் பொருள் அழிவுகளும் எவ்வளவு உண்டாகின்றன என்பதை நம்மவர் கவனிப்பதே கிடையாது. சகுனம் பார்ப்பதனால் கார்ய நஷ்டம் மாத்திரம் உண்டாகிறது. நாட்பொருத்தம் முதலியன பார்க்கு மிடத்தே கார்ய நஷ்டம் மட்டுமன்றி மேற்படி லக்னம் முதலியன பார்த்துச் சொல்லும் சோதிடருக்கு வேறு பணம் செலவாகிறது.

"காலம் பணவிலை உடையது" என்ற குறிப்புடைய இங்கிலீஷ் பழமொழி ஒன்று இருக்கிறது. இந்த சமாசாரம் நம்மவருக்குத் தெரிவதே கிடையாது. பொழுது வீணே கழிக்கப்படுமாயின், அதனால் பண லாபம் கிடையாமற்போகும். இன்று செய்யக்கூடிய' கார்யத்தை நாளைக்குச் செய்யலாமென்று தாமஸப்படுத்தி வைப்பதனால், அந்தக் கார்யம் பலமான சேதமடைந்து போகும். எதையும் தோன்றிய மாத்திரத்திலே சூட்டோடு செய்யும்போது, அதில் வெற்றி பெரும்பாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அதைத் தூங்கிப் போட்டுவிட்ட பிறகு செய்யப்போனால், அதில் ஆரம்பத்தில் இருந்த ரஸம் குறைந்து போகும். அதற்குத் தக்கபடி பயனும் குறைவெய்தும்.

"இத்தகைய மூட பக்திகளெல்லாம் 'படிப்பில்லாமையால் ஏற்பட்டிருக்கின்றன' என்றும், 'ஜனங்களுக்குப் படிப்புக் கற்றுக்கொடுத்தால் இவை அழிந்து போய்விடும்' என்றும் இங்கிலீஷ் சடிப்பாளிகள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். நானும் ஒருவாறு அது மெய்யென்றே நம்புகிறேன். ஆனால், அதற்குத் தற்காலத்தில் நமது தேசத்துப் பாடசாலைகளில் பயிற்றுவிக்கப்படும் இங்கிலீஷ் படிப்பு சுத்தமாகப் பிரயோஜனமில்லை என்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. சென்ற நூறு வருஷங்களாக இந்நாட்டில் இங்கிலீஷ் படிப்பு நடந்துவருகிறது. ஆயிரக்கணக்கான பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றுள் லக்ஷக்கணக்கான—கோடிக்கணக்கான ஜனங்கள் படித்துத் தேறியிருக்கிறார்கள். இவர்கள் மூடபக்திகளை எல்லாம் விட்டு விலகி நிற்கிறார்களா? இல்லை, நமது தேசத்தில் முப்பத்து மூன்று கோடி ஜனங்கள் இருக் பூம்புகார் பிரசுரம்

†மகாகவி சுப்பிரமணிய பாரதியார், கட்டுரைகள், (சென்னை-1977)

கிறார்கள். இத்தனை ஜனங்களுக்கும் ஒருவர் மிச்சமில்லாமல் உயர்தரக் கல்வி கற்றுக் கொடுத்த பின்புதான் மேற்கூறிய சாமான்ய மூட பக்திகள் விலக வேண்டுமென்பது அவசியமில்லை. ஏற்கனவே, இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் படித்துத் தேறியவர்கள் இந்த விஷயத்தில் தமது மனச் சாக்ஷிப்படி யோக்கியமாக நடந்து வந்திருப்பார்களானால், மற்றவர்களிலும் பெரும்பாலோர் நடை திருந்தியிருப்பார்கள். இன்னும் எத்தனையோ விஷயங்களில் நம்மவர் இங்கிலீஷ் படித்தவரின் நடையைப் பின்பற்றித் தங்கள் புராதன வழக்கங்களை மாற்றிக் கொண்டிருக்கக் காண்கிறோம். அதுபோலவே இந்த விஷயத்திலும் நடந்திருக்கும்.

ஆனால், இங்கிலீஷ் பள்ளிக்கூடத்திற்குப்போய் தேறினவர்களிடம் மனசாக்ஷிப்படியும் தன் அறிவுப் பயிற்சியின் விசாலத்திற்குத் தகுந்தபடியும் நடக்கும் யோக்யதை மிக மிகக் குறைவாக இருக்கிறது. இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் எத்தனையோ சாஸ்திரங்கள் —நிஜ சாஸ்திரங்கள், பொய் சாஸ்திரங்கள் இரண்டுங் கலந்தன—எத்தனையோ விதச் சாஸ்திரங்கள் பயிற்றுகிறார்கள்.

ஆனால் ஸ்வதந்திரம், ஆண்மை, நேர்மை, உண்மை, வீர்யம்—இவை அந்தனை ஜாக்கிரதையாகக் கற்றுக்கொடுப்பதில்லை. அறிவும் ஒருவன் தன் மனமறிந்த உண்மையின்படி ஒழுக வேண்டுமென்றும், அங்ஙனம் ஒழுகாதிருக்கல் மிகவும் அவமானமும் பாவமுமாகும் என்றும் கற்றுக் கொடுக்கும் பழக்கமே இல்லை. இந்த விஷயத்தைக்கூட வாய்ப்பாடமாய்ப் படிப்பித்துக் கொடுக்கிறார்கள். ஆனால் பழக்கப் பயிற்சி இல்லை. புஸ்தகத்துக்கும் வாய்ப்பேச்சுக்கும் செய்கைக்கும் இடையே லக்ஷம் யோசனை தூரமாக நடப்பவர்களுக்கு திருஷ்டாந்தம் காட்டப் புகுமிடத்தே, நமது நாட்டில் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் தேறிவரும் மனிதரைப்போல் இத்தனை சிறந்த திருஷ்டாந்தம் வேறெங்கும் கிடைப்பது மிகவும் துர்லபமென்று தோன்றுகிறது.

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல் வேறுபடையார் தொடர்பு"

என்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார்.

இதன் பொருள்-வாய்ப்பேச்சு ஒரு மாதிரியாகவும் செய்கை வேறொரு மாதிரியாகவும் உடையோரின் உறவு கனவிலும் கொள்ளுதல் தீது-என்பதேயாகும். பி. ஏ., எம். ஏ. பரீக்ஷைகள் தேறி, வக்கீல்களாகவும், உபாத்தியாயராகவும், என்ஜினீயர்களாகவும், பிற உத்தியோகஸ்தராகவும் வாழும் கணக்கில்லாத ஐயர், ஐயங்கார், பிள்ளை முதலியவர்களில் எவராவது ஒருவர் தம் வீட்டுக் கல்யாணத்துக்கு லக்னம் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று நிறுத்தியிருப்பாரா? "பெண் பிள்ளைகளின் உபத்திரவாதத்தால் இவ்விதமான மூட பக்திகளுக்குக் கட்டுப்பட்டு வாழும்படி நேரிடுகிறது" என்று சிலர் முறையிடுகிறார்கள். பெண் பிள்ளைகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். மூடத்தனமான, புக்திமான்கள் கண்டு நகைக்கும்படியான செய்கைகள் செய்ய வேண்டுமென்று ஸ்திரீகள் பலவின்றிப் பிதற்றுமிடத்தே அவர்களுடைய சொற்படி நடப்பது முற்றிலும் தவறு. மேலும் அது உண்மையான காரணமன்று. போலிக்காரணம். நம்மவர் இத்தகைய சாதாரண மூட பக்திகளை விட்டுவிலகத் துணியாமலிருப்பதன் உண்மையான காரணம் 'வைதிகரும் பாமரரும் நம்மை ஒருவேளை பந்தி போஜனத்துக்கு அழைக்காமல் விலகிவிடுவார்கள்' என்பதுதான். இங்கிலீஷ் படித்த மேற்குலத்து இந்துக்கள் கணக்கில்லாத



மூடபக்திகளைக் கைவிலங்குகளாகவும், கழுத்து விலங்குளாகவும் பூட்டிக்கொண்டு தத்தளிப்பதன் தலைமைக்காரணம் மேற்படி பந்தி போஜனத்தைப் பற்றிய பயந்தான். அதைத் தவிர வேறொன்றுமில்லை. அந்த மெய்யான காரணத்தை மறைத்துவிட்டு ஸ்திரீகளின்மீது வீண்பழி சுமத்தும் இந்த வீரர்கள் மற்றும் எத்தனையோ விவகாரங்களில் தம்மினத்து மாதரைவிலையடிமைகள் போலவும், விலங்குகள் போலவும் நடத்தும் விஷயம் நாம் அறியாததன்று. எண்ணில்லாத பொருள் நஷ்டமும் கால நஷ்டமும் அந்தக் காரணத்தின் இகழ்ச்சியும் உலகத்து அறிஞரின் நகையாடலும் ஸத்ய தெய்வத்தின் பகைமையும் சிறிதென்று கொண்டீர்! பந்திபோஜன ஸ்வதந்திரம் பெரிதென்று கொண்டீர்! தைரியமாக நீங்கள் உண்மை என்று உணர்ந்தபடி நடவுங்கள். பந்திபோஜனம் சிறிது காலத்துக்குத்தான் உங்களுக்குக் கிடைக்கா திருக்கும். ஸத்ய பலம் முதலிய பல காரணங்களால் மேற்படி பந்தி போஜனமும் அதிகமாகும். பிறகு உங்கள் கூட்டத் தொகை உங்களுக்கு ஸித்தியாய்விடும். தைர்யமாக வேலை செய்யுங்கள்.

# புதுமைக் கவிஞன் பாரதி

அ. ச. மதிவாணன்,
இறுதியாண்டு தமிழிலக்கியம்.

பெண்களைப் பேணும்வழி சொன்னான்!
பேசும்பொய்யைத் தள்ளென்றான்!
ஆண்மையது ஆன்மீக வாழ்வென்றான்,
வீரத்தால் சாவோமென்றான்!
நாணுவது மடமையெனச் சொன்னான்
இத்திற நெஞ்சத்தாலே
காணுவோம் புதுவுலகு என்றவனும்
கவினுறு கவிதை பாடினனே.

தேசப் பாடல்கள் யாவினுமே
திண்ணிய வீரம் குழைத்திடுவான்
நேசக் கவிஞன் பாரதியாம்
நெஞ்சில் குலவிடும் தேனவான்
பாசக் கரங்களில் மின்னிடுவான்
பாட்டுக் குயிலாம் பாரதியே!
வாசம் தகழ்ந்திடும் பாடல்களில்
வாழ்வை வகையாய்ச் சொல்லிடுவான்.

# கவி மேகம்

சே. நாகராசன்,
முதலாம் ஆண்டு,
இளங்கலை ஆங்கில இலக்கியம்:

பாரதி! பாரதி! - உன்
கவிதைப் பணிக்கு நீ!

இனி எத்தனை வருடயுகங்கள் ஆயினும்—உலகம்
உன்னை மறந்திடுமோ?
பனி மார்கழி பழித்திட எரிதழல் என்—உந்தன்
கவிதை உருக்கிடுமே!
தமிழ் வசனக் கவிதை தந்தை ஆனாய்—இந்தப்
புவியினில் நீ நிலைப்பாய்!
குமிழ் நீர்மேல் போலொருநிலை உனக்கில்லை—அந்தச்
சூரியனாய் உதிப்பாய்!

பாரதி! பாரதி—நீ
பாரத அடிமைக்குத் தீ!

பரங்கியர் பாடியில் பாரதத்தாய்—உறங்கிய
காலமுன் காலமடா!
கரங்களில் அடிமைச் சின்னம் பூண்ட—பதுமையாள்
அன்னை பராசக்தியடா!
அன்னையால் துயின்ற கோழைப் புலிகளை நீ—எழுப்பிய
கவிமேக இடி ஆமடா!
மின்னலாய் இருண்ட நிலத்தில் நீந்தி—இருளைப்
போக்கவந்ததுன் கவிதையடா!

பாரதி! பாரதி – பழமைப்
பெண்ணடிமைக்கு நீ தீ!

பட்டியின் பசுவினைப் போல் பெண்கள்—வீட்டில்
கட்டிய நாளில் நீ கொதித்தாய்!
வெட்டிய வார்த்தைத் துண்டுகளில்—விடிந்திடச்
சினங்கொண்டு நீ வெடித்தாய்!
கங்கை காவிரி இணைத்தாயதனால்—தேசிய
ஒருமைப்பாட்டை ஓதி விட்டாய்!
சிங்களத்தின் கற்பனைப் பாலம் அமைத்து—உலக
ஒற்றுமைதன்னைப் போற்றினாய்.



# வடவைக் கனல்

—மா. கோதண்டராமன்.

நெட்டைக் கனவில்
நெடுங்காலம் தவமிருந்து
ஆண்மைச் சுதந்திரத்தை
ஆராதித்த கவிக்குயில் நீ.

பெட்டைப் புலம்பலுக்குப்
புரட்சித் தீமூட்டி
ஆணவத்தை வேரோடே
சாய்த்தவன் நீ.

உன்
பாரத பூமியில்
சாதி மதங்களுக்குச்
சாவுமணி அடித்தாலும்
சரஞ்சரமாய்ச் சாதி
சதிராடும் காலமிது.

சிந்து பாட்டிசைத்துச்
சீர்திருத்தம் சொன்னாலும்
வீதியெலாம் சாதிகளின்
ஊர்வலங்கள்; கனல்பறக்கும்
அச்சுறுத்தல் முழக்கங்கள்;
சதுகைக்கே முழக்கமிடும்
சாதிவெறி ஒத்திகைகள்,
வறுமைக்கு வேட்டுவைக்க
வந்தவர்கள் எல்லோரும்
வறுமைக் கிழவிகளை
விவாகரத்து செய்துவிட்டு
வாலிப வளங்களையே
மணந்து கொண்டார்
கொள்கைத் திப்பந்தங்களை
கிணற்றிலே போட்டுவிட்டார்.

ஆனால் நீயோ
இன்னும் எங்களிடம்
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்
நீகூட இன்றிருந்தால்
சினிமா பாட்டெழுதிச்
சிட்டாகப் பறந்திருப்பாய்.

ஆண்மைக் கவிச்சிங்கமே
உன் வடவைக்கனல் பாடல்களில்
தீயின் குழம்புகள் இன்றும்
கொஞ்சமும் ஆறாமல்
கொழுந்துவிட்டு எரிகின்றன.

அத்தீயில்
மூடத்தனத்தின் முள்வேலி
முழுதாக எரிக்கப்படுகின்றன.

அன்றுநீ
'பள்ளித் தலமனைத்தும்
கோயில் செய்குவோம்' என்றாய்

இன்றோ
எங்கள் கல்விக்கூடங்களில்
பாடங்கள் சொல்வதையே
பாவமென்று எங்கள்
வாத்தியார்கள்
படமெடுக்கப் போய்விட்டார்
இன்னும் சிலர்

'சைடு பிஸினஸ்' தொடங்கிவிட்டார்
சிலர்

அரசியல் வாதிகளின்
அடிவருடப் போய்விட்டார்
சிலர்

வகுப்பறையை விட்டுவிட்டுப்
பாட்டெழுதிப் பணம் சேர்க்கக்
கோடம்பாக்கமே கதியானார்

மாணவச் செல்வங்களோ
சினிமாக் கொட்டகையில்
பொன்மேனி ஆடலுக்கு
ஆலவட்டம் போடுகின்றார்.

இன்றிங்கே நீயிருந்தால்
புரட்சிப் பூகம்பமாய்-
வடவைக்கனல் தீயாய்
மாறி இருப்பாயா?
யானறியேன் பராபரமே.



# புதுயுகப் புலவன் பாரதி

—ப. இராமசாமி, எம்.ஏ., எம்.பில்.,
தமிழ்ப் பேராசிரியர்.

கொட்டும் கவிமுரசாய்த் திக்கெட்டும் தமிழ்முழக்கம் செய்தான் மகாகவி பாரதி. அச்சம், அவா, அழுக்காறு இவற்றால் அழுக்கேறிக் கிடந்த இந்தியமக்களின் இதயக் கூட்டில் புரட்சிப் புயலை எழுப்பி, அஞ்சாமைக் கனலை மூட்டி விடுதலை வேள்வியை நடத்திக்காட்டியவன் அவன், கொஞ்சு தமிழெடுத்தான்; செஞ்சொற்கவி தொடுத்தான்! பகைவர் அஞ்சி நடுங்கினார்; தீமைகள் வெந்து ஒடுங்கின! புதுயுகம் ஒன்று கீழ்வானில் ஒளிக்கரங்களை விரித்தவாறே இந்திய மண்ணில் காலடி எடுத்து வைத்தது, அவன் காட்டிய வாழ்வியல் கருத்துகள் அளப்பருங்கடலாய், விளக்கரும் பொருளாய் விரிந்துகிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றின் ஒளிக்கீற்றுக்களைச் சற்றே எட்ட நின்று எட்டிப்பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

பாரதமாதாவின் பள்ளியெழுச்சி பாடிய பாரதி, அவளிடம் வேண்டியதெல்லாம் விடுதலையே. விடுதலையென்றால் நாடு அடிமைத்தளையினின்றும் விடுபடுவது மட்டுமன்று நாட்டு மக்களை நலிவுறச் செய்யும் அத்தனைக் கட்டுகளிலிருந்தும் அவர்கள் விடுதலை பெறவேண்டுமென அவன் விரும்பினான். அறியாமை, அச்சம், பெண்ணடிமை, சாதிப் பேயின் சதிராட்டம், போட்டி, பொறாமை, பூசல் ஆகியவற்றிலிருந்து அனைத்திந்திய மக்களும் விடுதலை பெறவேண்டுமென்பதே அக்கவிக்குயிலின் கனவாக இருந்தது. 'விடுதலை! விடுதலை! விடுதலை' என்று வீரமுழக்கமிட்டார்.

அந்நியன் சுரண்டுவது போதாதென்று, உள்நாட்டிலேயே ஒன்றுமறியா அப்பாவி மக்களைச் சுரண்டிக்கொழுக்கும் ஓநாய்கள் பல உலவிவருவதைக் கண்டான். ஏமாந்து வாடும் ஏழை எளியோர்க்கு விடுதலை பெற்றுத்தரக் கன்னல் தமிழைக் கனலுமிழும் தமிழாக்கினான். சுடர்முகம் தூக்கினான்; தமிழ்ச் சூட்டுக்கோல் எடுத்தான்.

"மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர்நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?"
"இனியொரு விதிசெய்வோம்-அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்"

எனப் புதுயுகம் சமைக்கும் போர்ப்பரணி பாடினான்.

'எல்லார்க்கும் எல்லாமென்றிருப்பதான இடம்நோக்கி இந்தியமக்கள் ஏறுநடை போட, ஏற்ற வழிபலவும் எடுத்துரைத்தான் பாரதி. மக்களின் முதல் தேவை உணவு; அடுத்தது அறிவு. அறிவு வந்துவிட்டால் அனைத்தும் வந்துவிடும். எனவேதான்,

" வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும் "

எனப் பணித்தான். அவன் தெய்வத்தை வணங்கியபோதும் தன் தேக நலத்திற்காக வணங்கவில்லை; தன் தேச நலத்திற்காகவே வணங்கினான்!

" சொல்லடி சிவசக்தி!-எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ-இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே! "

என்பதே அவனுடைய தெய்வவணக்கமாயிருந்தது.

ஒருவனுடைய தாய்மொழிப்பற்றே தாய்நாட்டுப்பற்றாய் மலரும் என்பதை அவன் அறிவான். எனவேதான் தன் தாய்மொழியாம் தமிழ்மீது தண்டாக்காதல் கொண்டான் அத்தண்டமிழ்ப் புலவன்.

" வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு! "

எனும் இப்பாடலடிகள் நாட்டுப்பற்றின் மூலவித்தினை நமக்குணர்த்துகின்றன. தாய் மொழிப்பற்று, இனப்பற்று, தேசியப்பற்று என்ற முறையில்தான் நாட்டுப்பற்று படிப்படியாகப் பரிணும வளர்ச்சிப்பெறும் என்பதை தமிழ்-தமிழர்-பாரதநாடு எனப் படிப்படியாக இப்பாடலில் நாட்டுகிறான் பாரதி.

உணவும் தொழில்களும் ஓங்கி வளரினும் அவற்றால் மக்கள் உறுபயன் எய்தித் தம்முள் ஒற்றுமை வேண்டும் என்பதை உணர்ந்தவன் பாரதி. குன்றுபோல் குவியும் வளமனைத்தும் ஒரு சிலரிடமே சென்று சேருமேல் சீர்ப்படுமோ நாடு? எனவேதான்,

" முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை "

எனப் புரட்சிக் கொடிபிடித்துப் புதுயுகம் சமைக்கப் புறப்பட்டான்!

இவ்வாறு விடுதலையும், உணவும், அறிவும் மொழிப்பற்றும், ஒற்றுமையுணர்வும் ஒருங்கே பெற்ற உன்னத நாடாக இந்தியநாடு ஏற்றம் பெற்றுயரத் தன் பாட்டுத் திறத்தால் புதுப்பாதை வகுத்திட்ட பைந்தமிழ்த் தேர்ப்பாகனே பாரதி. அவன் புகழ் போற்றி அவன் வகுத்த சமதர்மப் பாதையில் அரியேறெனப் பீடுநடை போடுவோமாக.



# இசையின் வழி நானறிந்த பாரதி

பேரா. ஆ. நாகராஜன், எம். ஏ., எம். எஸ்.,
கல்லூரி முதல்வர்.

1943 ஆம் ஆண்டில் நாட்டின் விடுதலைப் போராட்டக் கிளர்ச்சிக்குப் பிறகு என் எதிர்காலத்தை யோசித்தபடியே அந்தக் கோடை இரவில் மயிலைக் கோயில் பக்கம் சென்றுகொண்டிருந்தேன்;

'திக்குத் தெரியாத காட்டில்-உனைத்
தேடித் தேடி இளைத்தேனே.'

—என்னும் பாட்டின் இசை

என் செவியில் தேனாய் இனித்தது. அப்பாட்டைப் பாடிய இசை வல்லுநரின் குரலால் கவரப் பெற்றேன்; என்கவலையை மறந்து கோயிலுக்குச் சென்றேன்.

மயிலைக் கோயிலில் வசந்த காலத்தில் நடைபெறும் இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு முப்பத்தைந்து வயதுள்ள இளம் பாடகர் இசைமாரி பொழிந்து கொண்டிருந்தார். ஒரு அரைக்கைச் சட்டை, ஒரு கதர் வேட்டி, அள்ளிமுடித்த குடுமி, காதில் பளபளவென மின்னும் கடுக்கன், சீரிய பார்வை, பளிச்சென்ற முகம், என் கருத்தைக் கவர்ந்தன. என் போக்கை மாற்றிக் கொண்டு கோயிலுக்குள் நுழைந்தேன். மெல்ல மேடையருகில் சென்றமர்ந்து நிகழ்ச்சி முழுவதையும் அனுபவித்தேன்.

1943-ஆம் ஆண்டில் வெள்ளையரின் ஆட்சி விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்த நாட்களில் அதுவும் ஆங்கில மோகமும் மிதவாதிகளும் நிறைந்திருந்த மயிலாப்பூரில் ஒரு இளம் சங்கீத வித்வான் பாரதியாரின் பாடல்களைத் துணிவுடன் ஒரு அங்கீகரிக்கப் பட்ட இசைக் கச்சேரியில் பாடுவது பதினாறு வயது சிறுவனான எனக்கு மிகவும் வியப்-பாகவே இருந்தது. வியப்பு மேலோங்கியது; அவரைப்பற்றித் தெரிந்து கொள்ளத் துடித்தேன். அருகிலிருந்தவர்களைக் கேட்டபோது அந்த இசைக்கலைஞர் தான் திரு. ஜி. என். பாலசுப்பிரமணியம் என்றறிந்தேன். ஆங்கில இலக்கியத்தில் எம். ஏ., பட்டம் பெற்ற அவர், அதனால் வரும் பயனை அன்றே உதறிவிட்டு இசையை சீரிய முறையில் பயின்று கர்நாடக இசையையே தொழிலாகவும் வாழ்க்கையாகவும் கொண்டவர் என்பதை யறிந்தேன்.

இசையில் சிறிது பயிற்சி பெற்றவன் என்பதனால் அவரை நேரில் சந்தித்து என்னை அவருடைய சீடரில் ஒருவனாக ஏற்றருளுமாறு வேண்டினேன். அவர் என்னைப்பற்றி அறிந்து வைத்திருந்தார். 1942-43 ஆம் ஆண்டில் அரசியல் காரணமாக என் கல்வி பாதிக்கப்பட்டதை அறிந்த அவர் "நீ முதலில் காலேஜில் சேர்ந்து படிக்க ஆரம்பித்த பிறகு என்னிடம் வா" என்று சொல்லியனுப்பினார். தடைப்பட்ட கல்வியை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து மீண்டும் தொடங்கினேன்; மறுநாளே நான் திரு.ஜி என்.பி. யிடம் சென்றேன். அவரும் என்னைப் புன்முறுவலுடன் வரவேற்றார். அதுதான் நான் தமிழிசையில் தேசியத்தைப்பற்றி அறியத்துவங்கிய முதல் நாள் ஆகும்.

1. பாரதியார் பாடல்கள். கண்ணன் பாட்டு—கண்ணன்—என் காதலன் பா. 12. சக்தி வெளியீடு (1957) பக். 419.

திரு. ஜி. என். பி. க்கு முன்பே சில இசைக்கலைஞர்கள் தேசியத்தைத் தமிழிசை வழியாகப் பரப்பிவந்தார்கள். குறிப்பாக மறைந்த இசைமேதை கே.பி.சுந்தராம்பாள் முசிறி சுப்பிரமணிய ஐயர் போன்றோர் இதனை ஒரு தர்மமாகவே செய்து வந்தனர் ஆனால் திரு. ஜி. என். பி. அவர்கள் தம் இலக்கியப் பின்னணியின் காரணமாகப் பாரதியின் தேசிய உணர்ச்சி, கவித்திறன், இசைவல்லமை, ஆகியவற்றை ஒரு புதிய நோக்கில் கண்டார் இம் மூன்றின் மூலம் தமிழ்ச் சமுதாயத்தில் தேசிய உணர்ச்சியைச், சுடர் தரும் விளக்கினைத் தூண்டிவிடும் நூண்டுகோல்போல் இருந்து ஊக்கமளித்தார். எல்லாவற்றிற்கும் மேலாகப் பாரதியார் தன் வாழ்நாளில் பட்ட இன்னல்களையெல்லாம் மறந்து தமிழையும், தேசியத்தையும் இணைத்து ஒரு புதிய பாதையை அமைத்துள்ளார் என்று திரு ஜி. என். பி. அவர்கள் அப்போது என்னிடம் சொன்னது என் நெஞ்சில் இன்றும் பசுமையாகவே உள்ளது. அவருடைய தீவிர சக்தி வழிபாட்டிற்கு அடிப்படையாக அமைந்த காரணங்கள் பல. ஆனால் அவரது சக்திப் பாடல்களின் இசையானது மேடைக்கு ஏற்றதாக அமையாதிருப்பினும் பாரதியின் தீவிர பக்தியை வெளிப்படுத்தியது. அவரது ஆன்மீக அறிவு தேசியத்தையும் தமிழையும் ஒன்றிலே வெளிப்படுத்த அடிப்படையாக அமைந்தது. அவர்பாடிய கண்ணன் பாட்டில், கண்ணன் - என் காதலன் என்னும் பகுதியில் பாடியுள்ள பாடல்களில் அவர்தம் செழுமை சான்ற பேருள்ளம் வெளிப்படுகிறது.

கண்ணம்மா-என் காதலி என்னும் பாடல்களில் சிங்கார ஒலியே நடம் பயில்கிறது. ஆனால் அவர்தம் தேசியப் பாடல்களில் அவரது மனக்குமுறல் அனைத்தும் ஆவேசத்துடன் வெளிப்படுகிறது.

'ஏழையென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே' 2.

என்னும் பாடலின்

மூலம் ஏழ்மை, சாதி இவற்றையெல்லாம் விடுதலையால் பெறமுடியும் என்று பாடுகின்றார். கல்வி, கேள்வி, ஞானம் இவை அனைவர்க்கும் பொதுவாகக் கிடைத்திடல் வேண்டும் என்பதே அவரது வேட்கை. 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே' என்று பாடும் போது சமதர்ம சமுதாயத்தை நினைத்தே பாடியுள்ளார் என அறிகின்றோம்.

'பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே' 3.

என்னும் பாடலில்

பாரதியின் நெஞ்சுரம் பளிச்சிடுகிறது. காலமாற்றத்தை விரும்பி வரவேற்கும் புதுமைஉள்ளம் வெளிப்படுகிறது தாயின் மணிக்கொடியைப் பரவசமாகப் பாடுகிறான். இந்தியத் தாயைப் பள்ளியெழுச்சி பாடித்து முயிலெழுப்புகிறான்.

2. பாரதியார்கவிதைகள். விடுதலை. பா. 30 சக்தி வெளியீடு (1957) பக். 51.
3. முன்னது. பக். 52.



இந்தப் பாரதி நூற்றாண்டில் அவரை ஒரு தமிழ்க் கவிஞனாகவோ, தேசியவாதியாகவோ மட்டும் என்னால் காணமுடியவில்லை. அன்று திரு. ஜி. என். பி. அவர்கள் கூறியவாறு பாரதியை மனித சமுதாயத்திற்குரிய கவிஞராகக் காண்கின்றேன். மனிதகுலத்தின் பெருமைக்கும் வளர்ச்சிக்கும் பாட்டிசைத்தவர் பாரதியார். சாதி மதப் பூசல்களைத் தகர்த்தெறிய வீர உணர்ச்சிப் பாடல்களைப் பாடினார். அவர் அக்காலத்திலேயே நடிப்புச் சுதேசிகளை அறிமுகப் படுத்திவிட்டார். பிறநாட்டுச் சமுதாயங்களை விளக்கிய தோடமையால் பாரதத்தின் பெருமைகொண்ட சமுதாயத்தைப்படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

'பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்' 4

என்னும் ஞானக் கவிதையைத் தமிழ்க் கவிஞனைத்தவிர வேறு யாரால் பாடமுடியும்.

'வெற்றி கொண்ட தோளினாய் வா வா வா' என்று புதிய சமுதாயத்தை வரவேற்கும் பாரதியின் உளப்பாங்கினைப் போற்றுவோம். அவர்வழி நின்று புதியதோர் உலகத்தைப் படைத்திட அயராது பாடு படுவோம்; வளம்பல குவிப்போம்.

பாரதி புகழ் வாழ்க.

4. முன்னது. பக். 241.

# பெண் விடுதலை

"பெண்ணுக்கு விடுதலை யென்றிங் கோர்நீதி
பிறப்பித்தேன்; அதற்குரிய பெற்றி கேளீர்
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால்!
மனையாளும் தெய்வ மன்றோ? மதிகெட்டீரே!
விண்ணுக்குப் பறப்பது போல் கதைகள் சொல்வீர்
விடுதலை யென்பீர், கருணை வெள்ளமென்பீர்
பெண்ணுக்கு விடுதலை நீரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை"

—பாரதியார்.

# கண்ணதாசனின் கவிதாஞ்சலி

“ தானென் றகந்தை கொண்டு
தலைசாய்க்கும் மன்னர் முன்னும்
நானென்று நின்றானடி—பாரதி
நாட்டினை வென்றானடி!

பத்துவிரல் களுள்ளும்
பாட்டினை ஊற்றி வைத்து
முத்தாய் உதிர்த்தானடி—பாரதி
முடிகொண் டமர்ந்தானடி!

பாரதி பாடிவைத்த
பாடலுக் கீடுவைக்க
யார்கவி செய்வாரடி—பாவலர்
வேறெதைச் சொல்வாரடி! ”

—கவிஞர் கண்ணதாசன்.

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

1457461
சென்னை-600 008.